Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!
மகாராசி சில்க்ஸ்
மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P.No : 0777286247.
(சி/2203)

பொதுசன நூலகம்
9 JUN 2004

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 20 (09.06.2004) புதன்கிழமை இதழ் :251

# நாடாளுமன்றத்தில் அமளி துமளி;

# செங்கோல் காணாமற்போனது!

## இரு பிக்குகள் தாக்கப்பட்டு வைத்தியசாலையில்

(கொழும்பு)

**ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த அக்மீமன தயாரத்ன தேரர் நேற்று நாடாளுமன்றில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள முயன்ற போது - ஆளும் கட்சியினர் தெரிவித்த எதிர்ப்பினால் நாடாளுமன்றில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது.**

**இந்த அமளிதுமளியின் போது - நாடாளுமன்ற செங்கோல் காணாமற் போனதுடன், தாக்குதலுக்குள்ளான இரண்டு ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.**

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 10.00 மணியளவில் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார தலைமையில் கூடியது.

ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர் கதலுவே ரத்னசீக தேரரின் இடத்திற்கு பதிலாக, அக்மீமன தயாரத்ன தேரரை நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும்படி சபாநாயகர் அழைப்பு விடுத்தார்.

அப்போது அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நீதிமன்றத்தினால் தடையுத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டிருப்பதனால் அக்மீமன தயாரத்ன தேரர் பதவிப்பிரமாணம் செய்யமுடியாதென ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். இதனால் நாடாளுமன்றில் அமளிதுமளி ஏற்பட்டது.

தயாரத்ன தேரர் சத்தியப்பிரமாணம் செய்வதற்கு அரசாங்கத் தரப்பு உறுப்பினர்கள் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்தனர். தமக்கு அவ்வாறான நீதிமன்றத் தடை உத்தரவு எதுவும் கிடைக்கவில்லையென சபாநாயகர் தெரிவித்தார்.

எதிர்ப்புக்களுக்கு மத்தியில் தயாரத்ன தேரர் சத்தியப்பிரமாணம் செய்ய முற்பட்டபோது, அரசாங்கத் தரப்பு உறுப்பினர்கள் ஆசனங்களிலிருந்து எழுந்து சபை மத்திக்கு வந்து தயாரத்ன தேரரை சூழ்ந்து கொண்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும், ஆசனங்களில் இருந்து எழுந்து சபை மத்திக்கு வந்தனர். இதனால் சபையில் உறுப்பினர்களுக்கு இடையே இழுபறி ஏற்பட்டதுடன் அங்கு மோதல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தாக்கப்பட்ட பிக்குகள் இருவரும் வைத்தியசாலையில் அனுமதி!

(கொழும்பு)

நாடாளுமன்றம் நேற்று கூடியபோது ஏற்பட்ட அமளி துமளியின் போது ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால் தாக்கப்பட்ட ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொலன்னாவ சிறிசுமங்கல தேரரும், அக்மீமன தயாரத்ன தேரருமே காயமடைந்த நிலையில் சிறி ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு உடலில் வெளிக்காயங்கள் எதுவும் ஏற்படாத போதும் தாக்குதல் நடாத்தப்பட்டதால் உட்காயங்கள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களான இரண்டு பௌத்த பிக்குகளும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதையடுத்து பெருந்தொகையான மக்கள் அவர்களைப் பார்வையிடுவதற்காக வைத்தியசாலையில் கூடியிருந்தனர்.

## அடுத்த கட்ட நடவடிக்கைகள்; எதிர்க்கட்சிகள் இன்று முடிவு!

### ஐக்கிய தேசியக்கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் எதிர்க்கட்சிகள் குழுவொன்றை அமைத்துள்ளன.

இன்று கூடவுள்ள இந்தக்குழுவே நாடாளுமன்றத்தில் அடுத்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை தீர்மானிக்கவுள்ளது. அந்தத் தீர்மானம் பின்னர், சபாநாயகருக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதேநேரம் ஜனாதிபதிக்கும் தெரியப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் தகவல ஐக்கிய தேசியக் கட்சியால், நேற்று மாலை நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருஜெயசூரிய, மஹிந்த சமரசிங்க மற்றும் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் பங்கேற்றனர்.

அமைச்சர்களான ஜீவன் குமாரதுங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மேவின்சில்வா ஆகியோரே நாடாளுமன்றில் பலாத்காரங்களில் ஈடுபட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் மோசமாக இடம்பெற்ற வன்முறை இதுவாகும் எனக் குறிப்பிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், புதிய நாடாளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்றத்திற்கு வரும் முன்னரே அவரது ஆசனம் ஆளும் தரப்பினரால் அகற்றப்பட்டதாகக் குற்றம் சுமத்தினர். (12ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற களேபரத்தில் மாணவர்கள் சிதறியோட்டம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற களேபரத்தை அடுத்து அங்கு கூடியிருந்த மாணவர்கள் பயப்பீதியினால் சிதறி ஓடினர்.

நேற்று நாடாளுமன்றத்தின் அமர்வுகளை பார்வையிடுவதற்காக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெருமளவான மாணவர்கள் கூடியிருந்தனர்.

நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமானதையடுத்து ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஜாதிக ஹெல உறுப்பினர்களும் கைகலப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் நாடாளுமன்றத்தில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனையடுத்து அச்சமும் பயப்பீதியுமடைந்த மாணவர்கள் கலரியை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற களேபரத்தை அடுத்து அங்கு கூடியிருந்த மாணவர்கள் பயப்பீதியினால் சிதறி ஓடினர்.

நேற்று நாடாளுமன்றத்தின் அமர்வுகளை பார்வையிடுவதற்காக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெருமளவான மாணவர்கள் கூடியிருந்தனர்.

நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமானதையடுத்து ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஜாதிக ஹெல உறுப்பினர்களும் கைகலப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் நாடாளுமன்றத்தில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனையடுத்து அச்சமும் பயப்பீதியுமடைந்த மாணவர்கள் கலரியை விட்டு வெளியேற முயற்சித்தனர். எனினும் அங்கிருந்த பொலிஸார் உடனடியாக வெளியேற அனுமதிக்கவில்லை. பின்னர் அங்கிருந்த மாணவர்களும் பொதுமக்களும் வெளியேற்றப்பட்டனர்.

கள் குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் எதிர்க்கட்சிகள் குழுவொன்றை அமைத்துள்ளன.

இன்று கூடவுள்ள இந்தக்குழுவே நாடாளுமன்றத்தில் அடுத்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை தீர்மானிக்கவுள்ளது. அந்தத் தீர்மானம் பின்னர், சபாநாயகருக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதேநேரம் ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற பெரும்பான்மை பலம் தொடர்பாக நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருஜெயசூரிய, மஹிந்த சமரசிங்க மற்றும் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் பங்கேற்றனர்.

அமைச்சர்களான ஜீவன் குமாரதுங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மேவின்சில்வா ஆகியோரே இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் மோசமாக இடம்பெற்ற வன்முறை இதுவாகும் எனக் குறிப்பிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், புதிய நாடாளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்றத்திற்கு வரும் முன்னரே அவரது ஆசனம் ஆளும் தரப்பினரால் அகற்றப்பட்டதாகக் குற்றம் சுமத்தினர். (12ஆம் பக்கம் பார்க்க)

# இயல்பு வாழ்க்கையை பாதிக்காது கண்டனப் பேரணி நடத்தப்படும்!

(யாழ்ப்பாணம்)

☆தமிழ்மக்களின் இயல்பு வாழ்கையை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

☆இடம்பெயர்ந்தோர் மீள சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுதல் வேண்டும்.

☆தமிழருக்கெதிரான திட்டமிட்ட படுகொலைகள் நிறுத்தப்படுதல் வேண்டும்.

ஆகிய மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்தே எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக- அரசாங்கத்தின் குழுபமான போக்கால் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுள்ளதுடன், யுத்த நிறுத்த உடன்படிக்கையும் கேள்விக்குள்ளாகியுள்ளதுடன் மீண்டும் ஓர் யுத்தம் உருவாகக்கூடிய சூழ்நிலையும் உருவாகி வருகின்றது.

இதனைத்தடுத்து மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து தமிழருக்கெதிரான வன்முறைகளை நிறுத்தி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே நாளை மறுதினம் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

அன்றைய தினம் வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள் யாவும் இயல்பாக தமது செயற்பாடுகளை மேற்கொள்ளும்.

எனினும், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், தரம் 8 இற்கு மேல் கல்வி கற்கும் மாணவர்கள் பேரணி இடம்பெறும் இடத்திற்கு, குறிப்பட்ட நேரம் மட்டும் அதில் பங்குபற்றிவிட்டு மீண்டும் தமது இயல்பான கடமைகளை மேற்கொள்ளமுடியும்.

பேரணியானது நல்லூர் முருகன் கோவில் முன்றலில் இருந்து ஆரம்பமாகி கோவில் வீதியூடாக நக்கா வீதியை அடைந்து அதனூடாக சோமசுந்தரம் அவனியுவை அடைந்து அவனியு வீதியூடாக கண்டி வீதியை அடைந்து, அதனூடாக யாழ்.செயலகத்தை அடையும்.

இந்தப் பேரணியானது நகரும் வேளையில் யு.என்.எச்.சி.ஆர், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ்.செயலகம் முதலானவற்றில் மகஜர்களைச் சமர்ப்பிப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# சகல கட்சிகளும் இணைந்து அரசுக்கு எதிராக நடவடிக்கை

## ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது



(கொழும்பு)

சகல எதிர்க்கட்சிகளுடனும் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டு அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளதாக-

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட சகல எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து செயற்படவுள்ளதாக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் தம்மாலோக்க தேரர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்-

நாடாளுமன்றத்தில் அக்மீமன தயாரத்ன தேரரும், கொலன்னாவ சுமங்கல தேரரும் ஆளும் தரப்பினரால் (12ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

(சி/2489)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி (புழுங்கல்) வழங்கலுக்கான கேள்வி கோரல்

**(குறிப்பு - 2004 ஏப்ரல், மே, யூன் மாதங்களுக்கான உலர் உணவு விநியோகத்திற்காக என்னால் 2004.06.01 திகதியன்று கோரப்பட்ட கேள்விகளில் 2004 ஏப்ரல் மாதத்திற்கான கேள்வி மாத்திரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு 2004 மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு இதன்கீழ் குறிப்பிடப்படும் கேள்வி கோரப்படுகின்றது)**

1. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004 மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்கு தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து கொள்வனவு செய்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ.சங்கங்களுக்கென கீழ்த்தரப்பட்டுள்ள தொகை சிவப்பு நாட்டரிசியை நேரடியாக விநியோகிப்பதற் கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளின் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | |
|---|---|---|---|
| | | மார்ச் 2004 MT | ஏப்ரல் 2004 MT |
| 01 | சாவகச்சேரி | 190 | 190 |
| 02 | கைதடி | 70 | 70 |
| 03 | கொடிகாமம் | 135 | 135 |
| 04 | உடுப்பிட்டி | 32 | 32 |
| 05 | கட்டைவேலி - நெல்லியடி | 45 | 45 |
| 06 | பருத்தித்துறை | 114 | 114 |
| 07 | புலோலி | 27 | 27 |
| 08 | மருதங்கேணி | 80 | 80 |
| 09 | யாழ்ப்பாணம் | 311 | 311 |
| 10 | நல்லூர் | 161 | 161 |
| 11 | அச்சுவேலி | 154 | 154 |
| 12 | நீர்வேலி | 115 | 115 |
| 13 | மானிப்பாய் | 131 | 131 |
| 14 | பண்டத்தரிப்பு | 90 | 90 |
| 15 | அளவெட்டி - மல்லாகம் | 64 | 64 |
| 16 | தெல்லிப்பளை | 150 | 150 |
| 17 | சங்கானை | 183 | 183 |
| 18 | சுன்னாகம் | 196 | 196 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 40 | 40 |
| 20 | வேலணை | 45 | 45 |
| 21 | ஊர்காவற்றுறை | 70 | 70 |
| 22 | காரைநகர் | 55 | 55 |
| 23 | தீவகம் | 12 | 12 |
| 24 | நெடுந்தீவு | 30 | 30 |
| | **மொத்தம்** | **2500** | **2500** |

02. கேள்விகள் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500 ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2004.06.03 ஆம் திகதி தொடக்கம் 2004.06.17 திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ சங்கங்களைப் பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

03. மீளளிக்க முடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா 500 ஐ அந்தந்த மாவட்டச் செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டரிசியாக (புழுங்க..) இருத்தல் வேண்டும் என்பதுடன், அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

05. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபாலுறையில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.06.18 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றையதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

06. கேள்விப்பத்திரத்தின் தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் 'சிவப்பு நாட்டுப் புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி' என எழுதப்படல்வேண்டும்.

07. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதை உடையவர் களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கரு தப்படும்.

08. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10 வீதம் மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயற்படுத்தல் முறிக்காக (Performance Bond) ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

09. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபை யினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும்பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

10. கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**செ.பத்மநாதன்,**
**தலைவர்/அரச அதிபர்,**
**மாவட்டக் கேள்விச்சபை/ மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**08.06.2004.**

(சி/2650)

# கிழக்குப் படுகொலைகளைக் கண்டித்து
# இன்று திருகோணமலையில் ஹர்த்தால்!

திருகோணமலை மாவட்டத்தில் இன்று பூரண ஹர்த்தாலுக்கு தமிழ் மக்கள்பேரவை அழைப்பு விடுத்துள்ளது. தலைநகர் வாழ் தமிழ் மக்களென விழித்து விடுத்திருக்கும் துண்டுப்பிரசுரத்தில், நேற்று நிமலன் இன்று நடேசன் நாளை? என குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தத் துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

ஊடகவியலாளர் நடேசன், பேராசிரியர் தம்பையா அவர்களின் படுகொலைகளை கண்டித்தும், சமாதானத்தை முன்னெடுப்பதாக கூறிக் கொள்ளும் இலங்கை அரசின் படையினரும், தமிழ் தேசியத்திற்கு எதிரான தேசவிரோத கும்பலும், ஒன்றுசேர்ந்து கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்துகின்ற சகல சதிகார நடவடிக்கைகளைக் கண்டித்தும், இலங்கை அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் மீண்டும் ஒரு அராஜக சூழ்நிலையை அரங்கேற்ற எடுக்கின்ற நடவடிக்கைகளைக் கண்டித்தும், இன்று பூரண கதவடைப்பு நடாத்தி, திருகோணமலை மாவட்ட தமிழ்பேசும் மக்களின் ஒன்றுபட்ட கண்டனத்தை தெரிவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இன்று அரச திணைக் களங்கள் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் கல்விக் கூடங்கள், போக்குவரத்துக்கள்யாவற்றையும் நிறுத்தி, ஸ்தம்பிதம் அடையச் செய்வதன்மூலம், எமது எதிர்ப்பினை சர்வதேசத்துக்குத் தொியப்படுத்துவோம் என கேட்கப்பட்டுள்ளது.

எந்தவித வன்செயலுக்கும் இடங்கொடுக்காது சாத்வீகமான முறையில் எமது எதிர்ப்பைத் தெரிவிப்போம் எனத் தெரிவிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் - முச்சக்கர வண்டிகளை பூரணமாக நிறுத்துமாறு வேண்டுகின்றோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது

# அம்பாறை வாள்வெட்டில் மாணவர் ஒருவர் மரணம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் மத்திய முகாம் புதிய வீதிப் பகுதியிலுள்ள இலுப்பையடிக் குளம் பாலத்தடியில் கடந்த சனிக்கிழமை மாலை இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில், மாணவன் ஒருவன் உயிரிழந்ததுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார்.

காணித்தகராறு காரணமாகவே இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் - இலுப்பையடிக் குளப் பாலத்தடியைச் சேர்ந்த கோபிதாஸ் (வயது - 16) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

நான்கு பிள்ளைகளின் தாயாரான புவனேஸ்வரி (வயது - 47) என்பவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாள்வெட்டை நடத்தியவர் தலைமறைவாகி விட்டதாகவும், மத்திய முகாம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், தெரிவிக்கப்படுகிறது. (07)

# மரத்தில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கி பொலிஸாரால் மீட்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் 5 ஆம் குறிச்சிப் பகுதியில், மரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி 56 ரகத் துப்பாக்கியொன்றும், அதற்குரிய மகசீன்களையும் பொலிஸார் நேற்று முன்தினம் காலை கண்டெடுத்தனர்.

தமக்குக் கிடைத்த தகவலொன்றை அடுத்து, அந்தப் பகுதிக்குச் சென்று தேடுதலை நடத்திய வேளையிலேயே மரத்தில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இந்தத் துப்பாக்கி கண்டெடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கருணா குழுவினரால் கைவிடப்பட்டு சென்ற இந்தத் துப்பாக்கியை எடுத்தவர்கள் அதனை விற்பனை செய்யும் நோக்கில் மறைத்து வைத்திருக்கலாமெனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக எவரும் கைது செயயப்படவில்லை. மேலதிக விசாரனைகளை ஏறாவூர் பொலிஸார் மேற கொண்டு வருகின்றனர்.

# இந்திய - இலங்கை உடன்படிக்கை தற்போது பொருத்தமற்றது

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையே செய்து கொள்ளப்படவுள்ள பாதுகாப்பு உடன்படிக்கை இன்றைய காலகட்டத்திற்கு பொருத்தமானதல்ல என ரெலோ இயக்கத் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான எந்தவொரு சமிக்ஞையையும் தற்போதைய அரசு வெளிப்படுத்தாத நிலையில், இந்த பாதுகாப்பு உடன்படிக்கை அவசியமற்றதெனவும் அவர் கூறினார்.

இந்த உடன்படிக்கையின் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கும் படையினருக்கும் தைரியம் அதிகரிக்குமேயன்றி, தமிழ் மக்களுக்கு எந்த வித பயனும் கிடைக்கப்போவதில்லை.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் விடயத்தில் இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென தமிழ் மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு இருக்கின்றார்கள்.

இந்த நிலையில், இந்த ஒப்பந்தம் செய்யப்படுவதன் மூலம், தமிழ் மக்கள் பெரும் ஏமாற்றத்தை எதிர் கொள்வர்.

எனவே, இந்த உடன்படிக்கையை மீள்பரிசீலனை செய்து அதனை இந்திய அரசு கைவிட முன்வர வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கறுத்தப் பாலம் ஊடான போக்குவரத்துத் தடை

மட்டக்களப்பு செங்கலடி கறுத்தப் பாலம் ஊடாக இரவு 10 மணிக்குப் பின் போக்குவரத்தை மேற்கொள்ள நேற்று முன்தினம் முதல் படையினர் தடைவிதித்துள்ளனர்.

இதனால், கரடியனாறு, இலுப்பையடிச் சேனைப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனெனில், இந்தப் பகுதியில் வாழும் மக்கள் இரவு நேரங்களில் அவசர தேவைகளுக்காக ஏற்படும் வைத்திய சேவைக்கு செங்கலடியிலுள்ள மருத்துவமனைக்கே செல்வது வழக்கம்.

தற்போது படையினர் இரவு பத்து மணிக்குப் பின்னான தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளதனால், அவசர தேவைக்கான மருத்துவ வசதி உட்பட, பிற வசதிகளையும் பெறமுடியாமற்போயுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# பொலிஸாரின் பவுசர் மோதி இளம் பெண் படுகாயம்

(வவுனியா)

வவுனியா ஆஸ்பத்திரிச் சந்தியில் பொலிஸாரின் தண்ணீர் பவுசர் மோதி, யுவதி ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெறறுள்ளது. பிரதான வீதி வழியாக துவிச்சக்கர வண்டியில் வந்த இரண்டு யுவதிகள் மீது சுற்று வளைவினுடாக வந்த பொலிஸாரின் பவுசர் மோதியது.

இதன்போது, ஜே.சுசிலாதேவி (வயது 23) என்பவர் காயமடைந்துள்ளார். மோதிய இடத்தில் வாகனம் நிறுத்தப்படாது, 50 மீற்றர் தள்ளியே வாகனம் நிறுத்தப்பட்டு இருந்தமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. (03)

# விவசாயக்கல்லூரி மீளவும் திறக்கப்படவுள்ளது

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் மூடப்பட்ட விவசாயக் கல்லூரிகளை மீளவும் திறக்கவுள்ளதாக தற்போதைய விவசாய, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அநுரா திஸநாயக்கா தெரிவித்தார்.

இவ்வாறு இந்த விவசாயக் கல்லூரிகள் மீளத் திறக்கப்பட்டால், சுமார் 200 மாணவர்கள் சேர்ததுக் கொள்ளப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தாா.

அத்துடன், புதிய பாடத்திட்டமும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும், இங்கு பல்கலைக்கழகத்தினால், வழங்கப்படும் பட்டம் போன்ற தகுதியானநிலை ஏற்படுத்தப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தொண்டமானின் பாதுகாப்பு குறைப்பு

இலங்கை தொழிலாளார் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் பாதுகாப்பு நேற்று முன்தினம் முதல் குறைக்கப்பட்டுள்ளது.

இவரது பாதுகாப்புக்கு தற்போது, இரு பொலிஸார் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணையமாட்டாதென கட்சி எடுத்த முடிவையடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

## மாணிக்கப் பிள்ளையார் கோவில் வீதியைத் திறந்துவிடுமாறு கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொம்மாந்துறைப் படைமுகாமுக்கு அருகிலுள்ள மாணிக்கப்பிள்ளையார் ஆலய வீதியை மக்கள் பாவனைக்குத் திறந்துவிடுமாறு அந்தப் பகுதி மக்கள் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பாதை மூடப்பட்டுள்ளதால், இரட்டையன் குடா மற்றும் கொம்மாந்துறை பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ள மூடியாதிருப்பதாகவும் அந்தப் பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு இந்தப் பாதையை மக்கள் பாவனைக்குத் திறந்த படையினர் மீளவும் அதனை மூடிவிட்டதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

# மேல் மாகாண மக்கள் முன்னணிக்கு புலிகள் ஆதரவு தெரிவித்துள்ளனராம்


(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களில் மேல் மாகாணத்தில் தனித்து போட்டியிடும் மேல் மாகாண மக்கள் முன்னணிக்கு ஆதரவு வழங்க தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வந்துள்ளதாகவும்

அவர்களது இந்த முடிவை வரவேற்பதாக மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே, இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் -

விடுதலைப் புலிகள் தமக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளமை தமது கட்சிக்கு மேலும் உற்சாகத்தையும், தைரியத்தையும் ஏற்படுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



திருகோணமலை - சுவாமிமலை கிராமத்தில் அமைக்கப்பட்ட முன் பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு முற்றத்தினை டெனிஷ் அகதிகள் பேரவையின் காப்பு அலோசகர் கிறிஸ் ருஷ் தனது பாரியார் சகிதம் குழந்தைகளை ஏற்றி ஆரம்பித்து மகிழ்வதைப் படத்தில் காணலாம். *படம் - சசிகுமார்.*

# தமது கட்சிமீது அவதூறாம்; ஹெல உறுமய சத்தியாக்கிரகம்!

தமது கட்சி மீதும், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்மீதும் மேற்கொள்ளப்பட்டு வரும் அவதூறான, பொய்யான செயற்பாடுகளை எதிர்த்து, சத்தியாக் கிரகம் இருக்கப் போவதாக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வண.உடுவே தம்மலோக தேரர் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிக்கையில் -

கட்சியின் பெயரைக் கெடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையை எதிர்த்து, தாம் செயலில் இறங்கப் போவதாகக் குறிப்பிட்டார்.

இதற்கு மாற்று வழியாகச் சாகும் வரையிலான உண்ணா விரதமொன்றைக் கண்டியிலுள்ள தலதாமாளிகைக்கு முன்பாக அல்லது களனியிலுள்ள ராஜ மகா விகாரைக்கு முன்னால் இருக்கவுள்ளதாகக் கட்சியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான வண. கொலன்னாவ சிறி சுமங்கல தேரர் தெரிவித்தார்.

# ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை சமர்ப்பிக்க ஐக்கிய தேசிய கட்சி முயற்சி

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு எதிராக அரசியல் குற்றப்பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்க, ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி முக்கியமான சில விடயங்களை நிறைவேற்றவில்லை எனவும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை இன்னும் சரியான முறையில் நிரூபிக்கவில்லை எனவும் குற்றஞ்சாட்டியே, அவருக்கு எதிராக இந்தப் பிரேரணையைத் தயாரிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடன் இருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை, எந்தவித காரணமுமின்றி ஜனாதிபதி கலைத்த பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரண்டு மாதங்களாகியும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவில்லை எனவும், ஐக்கிய தேசிய முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

இதன்மூலம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க-நாட்டு மக்களை அரசியல் ரீதியில் ஏமாற்றியுள்ளதாகவும் இந்தக் குற்றப் பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர்களான மங்கள சமரவீர, தினேஸ் குணவர்த்தன, விஜித ஹேரத் ஆகியோருக்கு எதிராகவும் ஐக்கிய தேசிய முன்னணியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றினை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றம் நாளை கூடியதும், ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பாக சபாநாயகருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# நியூஸிலாந்து அணியை வீழ்த்தி தொடரை வென்றது இங்கிலாந்து



நியூஸிலாந்து அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி - 2 : 0 என்ற நிலையில் தொடரை வென்றது.

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான 3 டெஸ்ட்போட்டிகள் கொண்ட தொடரின் 2 ஆவது போட்டி லோர்ட்சில் நடைபெற்றது. இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கடைசிநாள் ஆட்டத்தின்போது வெற்றிபெற 45 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை இங்கிலாந்து எட்டியது.

இரு அணிகளுக்கும் இடையே லோர்ட்சில் நடைபெற்ற முதல் டெஸ்டில் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் 2 ஆவது டெஸ்ட் போட்டியிலும் வென்றதன் மூலம் இங்கிலாந்து அணி 2 : 0 என்ற நிலையில் தொடரை வென்றது.

இதன்மூலம் இரு அணிகளும் கடைசியாக மோதியுள்ள 6 டெஸ்ட் போட்டிகளில் 5 இல் இங்கிலாந்து வென்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான 3 ஆவது டெஸ்ட் போட்டி டிரண்பிரிட்ஜில் நாளை தொடங்கவுள்ளது.

முன்னதாக இரு அணிகளுக்கும் இடையேயான இந்த 2 ஆவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்சில் நியூஸிலாந்து அணி 94 ஓட்டங்களை எடுத்தது. இங்கிலாந்து அணி முதல் இனிங்சில் 526 ஓட்டங்களை எடுத்தது.

இங்கிலாந்து அணியில் ட்ரெஸ்கோதிக் 132 ஓட்டங்களையும், ஜோன்ஸ் 100 ஓட்டங்களையும், பிளின்ரோப் 94 ஓட்டங்களையும் எடுத்தனர். இங்கிலாந்து அணியைவிட முதல் இனிங்சில் 117 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இனிங்சை நியூஸிலாந்து துவங்கியது.

2 ஆவது இனிங்சில் தடுமாறிய நியூஸிலாந்து அணி 4 ஆம் நாள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 102 ஓட்டங்களை எடுத்திருந்தது. 5 ஆம் நாள் ஆட்டத்தின்போது 40 நிமிடங்களில் மீதமிருந்த விக்கெட்டுகளை இழந்த நியூஸிலாந்து அணி 161 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

2 ஆவது இனிங்சில் நியூஸிலாந்து அணியில் மார்க் ரிச்சர்ட்சன் அதிகபட்சமாக 40 ஓட்டங்களை எடுத்தார். இறுதிநாள் ஆட்டத்தில் நியூஸிலாந்து வீரர் விற்றோரி காயம் காரணமாக களம் இறங்கவில்லை.

இங்கிலாந்து அணியில் ஹோகாட் 4 விக்கெட்டுகளையும், ஹார்மிசன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இதனால் 45 ஓட்டம் வெற்றி இலக்காக இங்கிலாந்து அணிக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஸ்ட்ராஸ் 10 ஓட்டங்களில் அவுட்டாக, ட்ரெஸ்கோதிக் 30 ஓட்டங்களிலும், புட்சர் 5 ஓட்டங்களிலும் இருந்தபோது 8 ஓவர்களில் வெற்றி இலக்கை இங்கிலாந்து அணி எட்டியது.

இதன்மூலம் 2 ஆவது டெஸ்டில் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வென்றது. ஆட்ட நாயகனாக ஜோன்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

## ஓமான் கிரிக்கெட் அணிக்கு சந்தீப் பட்டேல் பயிற்சியாளர்

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் வரும் 12 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை ஆசிய கிரிக்கெட் கவுன்சில் (ஏ.சி.சி) கிண்ணப் போட்டிகள் நடைபெற உள்ளன.

இந்தப் போட்டியின்போது ஓமான் அணியின் பயிற்சியாளராக சந்தீப்படேல் செயற்படவுள்ளார். இந்திய 'ஏ' அணியின் பயிற்சியாளராக இருந்து வரும் சந்தீப்பட்டேல் பகுதி நேரமாக ஓமான் அணியின் பயிற்சியாளராகச் செயற்பட உள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "இது ஒருபகுதி நேரப்பணிதான். இந்திய 'ஏ' அணிக்கான பணி ஏதும் இல்லாத நிலையில் ஓமான் அணியின் பயிற்சியாளராகச் செயற்படுவது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் கேட்டிருந்தேன். ஓமான் அணிக்கான பயிற்சியாளர் பதவிக்காலம் ஒருமாதம் கொண்டதாகும் எனக் கூறினார்.

கிரிக்கெட் கிளப்ஆப் இந்தியாவுடன் மூன்று போட்டிகளில் விளையாட இந்தியா வந்துள்ள ஓமான் அணி, நேற்று நடைபெற்ற முதல் போட்டியில் வெற்றி பெற்றதாகவும் பட்டேல் தெரிவித்தார்.

ஏ.சி.சி. கிண்ணப் போட்டியில் ஹொங் ஹொங், பஹ்ரைன், ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகளுடன் ஓமான் அணி 'சி' பிரிவில் இடம்பெற்றுள்ளது.




## பங்களாதேஷ் அணிக்கெதிராக மே.தீவுகள் இனிங்ஸ் வெற்றி!



(கிங்ஸ்டன்)

மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் இடையேயான 2 ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இனிங்ஸ் வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் முதல் இனிங்ஸில் 284 ஓட்டங்களை எடுத்தது. மேற்கிந்திய தீவுகள் முதல் இனிங்ஸில் 4 விக்கெட் இழப்புக்கு 559 ஓட்டங்களைக் குவித்து டிக்ளேர் செய்தது. சர்வான் 261, சந்திரபோல் 101 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

275 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இனிங்ஸை விளையாடிய பங்களாதேஷ் 3 ஆம் நாள் ஆட்டநேரமுடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 66 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று 4 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க மேலும் 209 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் பங்களாதேஷ் ஆட்டத்தைத் தொடங்கியது.

வேகப்பந்து வீரர் கோலின்ஸின் அபாரமான பந்து வீச்சால் பங்களாதேஷ் விக்கெட்டுக்கள் மளமளவென சரிந்தன.

கப்டன் ஹபிபுல்பசர் மற்றும் மஞ்சுரல் ஆகியோர் மட்டுமே தாக்குப் பிடித்து ஆடினர்.

பங்களாதேஷ் அணி 176 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணி இனிங்ஸ் மற்றும் 98 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

# ரெனிஸ் தர வரிசையில் ஹெனின், பெடரர் முதலிடம்



ரெனிஸ் வீரர், வீராங்கனைகளின் வரிசைப்பட்டியலை சர்வதேச ரெனிஸ் சங்கம் வெளியிட்டுள்ளது. அதனபடி பிரெஞ் ஓப்பனில் இரண்டாவது சுற்றில் தோறறாலும், ஹெனின் (பெல்ஜியம்) 5791 புள்ளிகளைப் பெற்று தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

கிலிஸ்டர்ஸ் (பெல்ஜியம்) 5069 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்திலும், பிரெஞ் ஓப்பன் பட்டத்தைப் பெற்ற அனஸ்டசியா (ரஷ்யா) 3816 புள்ளிகள் பெற்று மூன்றாவது இடத்திலுமுள்ளார்.

மவ்ரஸ்மோ (பிரான்ஸ்) நான்காவது இடத்திலும், டேவன்போர்ட் (அமெரிக்கா) ஐந்தாவது இடத்திலும், எலீனா டெமன்டீவா (ரஷ்யா) ஆறாவது இடத்திலும், ஜெனிபர் கேப்ரியாட்டி (அமெரிக்கா) ஏழாவது இடத்திலும், வீனஸ் வில்லியம்ஸ் எட்டாவது இடத்திலும், பவ்லா (ஆர்ஜென்ரீனா) ஒன்பதாவது இடத்திலும், சுவெட்லனா (ரஷ்யா) பத்தாவது இடத்திலுமுள்ளனர்.

ஆண்கள் பிரிவில் ரோஜர்பெடரர் (சுவிட்ஸர்லாந்து) தொடர்ந்து முதல் இடத்திலுள்ளார். குயில்லர் மோகோரியா (ஆர்ஜென்ரீனா) இரண்டாவது இடத்திலும், கால்லோஸ் மோயா (ஸ்பெயின்) மூனறாவது இடத்திலும் உள்ளனர்.

காடியோ (ஆர்ஜென்ரீனா), சபீன் (ரஷ்யா), ரோட்டிக் (அமெரிக்கா), ஹென்மன் (இங்கிலாந்து), நல்பாண்டியன் (ஆர்ஜென்ரீனா), ஹெவிட் (அவுஸ்ரேலியா), டொமினிக் (ஸ்லோவாக்கியா) ஆகியோர் 4 முதல் 10 ஆவது இடங்களில் உள்ளனர்.

# பாகிஸ்தான் முன்னாள் கப்டன் இளம் வீரர்களுக்குப் பயிற்சி!

ஆட்டநிர்ணய குற்றச்சாட்டின் ஆயுடகால தடை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் சலீம் மலிக் இவ வருட கடைசியில் இளம் வீரர்களுககு தனியார் பயிற்சி மையத்தைத் துவக்கவுள்ளார்.

கிரிக்கெட் சூதாட்ட விவகாரம் தொடர்பாக 4 ஆண்டுகளுக்கு முன்னனர் சலீம் மலிக்கிற்கு ஆயுட்கால தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் தன்னுடைய கிரிக்கெட் அக்கடமிக்காக இடத்தைத் தேர்வுசெய்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சலீம் மலிக் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது-

ஒரு பயிற்சியாளராக எனது புதிய வாழ்வை துவக்கவுள்ளேன். ஏனெனில் என்னைப் பார்ப்பவர்களெல்லாம் பயிற்சி முகாமை ஏன் துவக்கக்கூடாது என்று கேட்கின்றனர். பாகிஸ்தான் கிரிக்கெட்சபை என்னுடைய சேவையைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். பயிற்சி அக்கடமிக்காக லாகூரில் இடம் தேர்வுசெய்துவிட்டேன். இவ வருடக் கடைசியில் இந்த அக்கடமி துவக்கப்படும் என்று நம்புகிறேன்.

ஆயுட்காலத் தடை விதிக்கப்பட்டதிலிருந்து நான் போட்டிகளில் விளையாடவில்லை. ஆனால், கிரிக்கெட் விளையாடிய காலத்திலிருந்த அதே ஆர்வத்துடன் கிரிக்கெட் விளையாட்டைப் பின்பற்றி வருகிறேன் என்று கூறினார்.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த மார்க வோ, டிம்மே, ஷேன் வோர்ன் ஆகியோர் 1994 இல் கராச்சியில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் திறமைக்கும் குறைவாக விளையாட சலீம் மலிக் பணம் தரமுன்வந்துள்ள தாக குற்றஞ்சாட்டினர். இதற்காக சலீம் மலிக்கிற்கு ஆயுட்காலத் தடை விதிக்கப்பட்டது.

இந்த தடை குறித்து சலீம் மலிக் கூறுகையில் -

ஒரு தலைப்பட்சமான இந்தத் தடையால் என்னுடைய கிரிக்கெட் வாழ்வும் முற்றாகப் பாதித்துவிட்டது. ஏனெனில் எனக்கு எதிரான குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை. குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும்வரை யாரும் குற்றமற்றவர்கள் என்பது உலகறிந்த உண்மை.

பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த முன்னாள் வீரர் சலீம் மலிக் 103 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ளார். இதில் 5768 ஓட்டங்களை அவர் குவித்துள்ளார். 283 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 7170 ஓட்டங்களைக் குவித்துள்ளார். பாகிஸ்தான் அணிக்காக 12 டெஸ்ட் மற்றும் 34 ஒருநாள் போட்டிகளில் கப்டனாக இருந்துள்ளார்.

# சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஆப்கானிஸ்தானும் நுழைகிறது!

தீவிரவாதத்தாலும், போரினாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த கிரிக்கெட் அணி முதன் முறையாக சர்வதேச கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளது.

ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிககான தகுதிச் சுற்றுப் போட்டிகள் மலேசியாவில் நடைபெற உள்ளது. இந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்காக ஆப்கானிஸ்தான் அணி நேற்று மலேசியா சென்றது.

ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் தகுதிச் சுற்று கிரிக்கெட் போட்டியில் 16 அணிகள் பங்கேற்கின்றன. இதில் ஒரு அணியாக ஆப்கானிஸ்தானும் கலந்து கொள்கின்றது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றால் ஆப்கானிஸ்தான் 2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற உள்ள உலகக் கிரிகெட் போட்டிக்கு தகுதிபெறும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் மலேசியாவில் நடைபெறவுள்ள போட்டியில் ஆப்கானிஸ்தான் வியப்பளிக்கும் உறுதியுடன் இருப்பதாக கப்டன் அல்லாதாத்நூரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நூரி கூறுகையில், 'உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு தகுதி பெறுவதற்கான போட்டியில் எங்களது கடைசிக் கட்ட பயிற்சிகளை பாகிஸ்தானில் மேற்கொண்டோம். அதே சமயம் எங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். என்று எதிரணியினருக்கு எச்சரிக்கை விடுக்கின்றோம் என்று கூறினார்.

ஆசிய கிரிக்கெட் கவுன்சில் போட்டியில் 16 அணிகள் பங்கேற்கின்றன. இதில் ஆப்கானிஸ்தான், சவுதி அரேபியா, பஹ்ரைன், ஈரான் ஆகிய அணிகள் முதன் முறையாக கலந்து கொள்கின்றன.

இந்தப்போட்டியில், இறுதிப் போட்டிக்கு தகுதிபெறும் அணிகள் அடுத்த ஆண்டு அயர்லாந்தில் நடைபெறும் ஐ.சி.சி. கிண்ணப்போட்டிக்கு தகுதிபெறும்.

இந்த ஐ.சி.சி. கிண்ணப் போட்டியில் முதல் 5 இடத்தை பெறும் அணிகள் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு தகுதிபெறும்.

ஏ.சி.சி. கிண்ணப்போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி வரும் 13 ஆம் திகதி நடைபெறவிருக்கும் முதல் போட்டியில் ஹொங்ஹொங்கை எதிர்கொள்கிறது. இரண்டுநாட்கள் கழித்து பஹ்ரைனை எதிர்கொள்கிறது.

இந்த வருடமானது எங்களுக்கு சிறந்த வருடமாக உள்ளது. ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்கின்றோம். கிரிக்கெட் விளையாட்டில் நல்ல விஷயங்கள் தென்படுகின்றன. என்று ஆப்கானிஸ்தான் கப்டன் நூரி தெரிவித்தார்.

தலிபான் ஆட்சி ஏற்பட்டதன் மூலம் ஆப்கானிஸ்தானில் கிரிக்கெட் விளையாட்டுக்குத் தடைவிதிக்கப்பட்டது.

2001 இல் அமெரிக்கா தலைமையிலானபடைகளின் கீழ் ஆப்கானிஸ்தான் வந்த பின்பு கிரிக்கெட் விளையாட்டு மீண்டும் தலைதூக்க ஆரம்பித்தது. தற்போது ஆப்கானிஸ்தானில் பதிவு செய்யப்பட்ட 3500 கிரிக்கெட் வீரர்கள் உள்ளனர்.

## யாழ்.மாவட்ட பாடசாலைகளின் உடற்பயிற்சி போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மேலும் இதில் முதல் இரு இடங்களையும் பெறும் அணிகள் வடக்குக் கிழக்கு மாகாணப் போட்டிக்குத் தெரிவாகும் இப்போட்டியானது வவுனியாவில் யூலை மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்டப் போட்டிக்கு அணிப் பொறுப்பாசிரியர்கள் பிள்ளைகளின் ஒழுக்கம் கட்டுப்பாட்டிற்கும் பொறுப்பாயிருத்தல் வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## Part II

**1. Complete the questions with a correct proposition given.**

In, from, by, to, for

1) Who was that book written
.........................................................................................?

2) Who does that dictionary belong
.........................................................................................?

3) What sort of books you are interrested
.........................................................................................?

4) What is your home town famous
.........................................................................................?

5) You've got a letter. Who is it from
.........................................................................................?

**2. Underline the correct word in the bracket in each sentence.**

1) You can have (either/each) an apple or an Orange.

2) There are fifteen rooms in that hotel.(each/every) room is little different.

3) My two sisters are good in English, but(none/neither) of them can do maths at all.

4) What's the name of the woman(who/which) was wearing a blue saree.

5) I don't like the food(who/which) is very spicy.

6) Ravi always plays his walkman (loud/loudly)

7) Mala can organize parties (good/well)

8) Mary is a (beautiful/beautifully) girl.

9) We have been going to swimming class(since/for) last January.

10) We have been living in Colombo (since/for)ten years.

**3.I. Make questions from the statements asking about the underlined words.**

**Ex:** What are you doing?
I'm making a kite.

1).........................................................................................
I'm waiting for the postman
2).........................................................................................
I stayed with some friends.
3).........................................................................................
He died of heart attack.
4).........................................................................................
I'm writing to my aunt in Canada.
5).........................................................................................
I'm worried about the exam.

II. There are vacancies for software engineers in John Keels Pvt.Ltd. Write a Letter to the manager of John Keels requesting him to send you an application form and further details about the post.

.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................

**4. Underline the correct polite response.**

Ex: Sorry! - (a) Your'd better be (b) Don't worry about it.

1) I've passed my exam- a) Never mind b) Congratulations.
2) Can I borrow your pen- a) of course not b) Certainly
3) What's the time please- a) I don't know b) Sorry I have no Idea
4) We are getting married- a) That's all right b) That's wonderful news
5) I'm sorry- a) so you should be b) It doesn't matter

### 5. Change the followings into indirect speech

1) John said, "I feel tires this morning.

2) Mohan told me " You're lonely"

3) Teacher said, "I'll discuss it with the Principal tomorrow"

4) Teacher told us, "Don't shout".

5) Father said to me, "Go to your room".

### 6. Complete the following statements (1) adverbial of place (2) adverbial of time (3) adverbial of reason (4) adverbial of manner (5) adverbial of purpose.

1) we are going ..........................................................................
2) They came to settle in Colombo..........................................
3) I'm Late ..................................................................................
4) I went to Jaffna.......................................................................
5) He went to Jaffna.....................................................................

**7. Write any one of the followings. Use about 200 words**


1) Unemployment in Sri Lanka.
2) Advantages and disadvantages of Science and Technology.
3) Natural disaster - that you have experienced or heard.

.........................................................................................

P.N.Shutharson
Kokuvil Hindu College

இங்கே மடிக்கவும்





மாணவர் மலர்

# மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

❋ 1. கீழே சில நிகழ்வுகளைக் குறிக்கின்ற கோட்டுப்படங்கள் உண்டு. இவற்றினை நன்கு அவதானித்து, படங்களைத் தொடர்ந்து தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடைக்குரிய இலக்கத்தை அருகேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.



நிகழ்வு 1 நிகழ்வு 2 நிகழ்வு 3 நிகழ்வு 4

1. நிகழ்வு 1 ஆனது
   1) எப்போதும் மாலைவேளையில் இடம்பெறும்
   2) பாடசாலை விட்டு வரும்போது அவதானிக்கலாம்
   3) வீட்டுக்கு அருகாமையில் நடைபெறலாம்
   (.............)


2. நிகழ்வு 4 உடன் தொடர்பானது
   1) இருவர் சேர்ந்து ஒப்பந்தம் செய்கின்றனர்
   2) நடத்துநர் ஒருவர் சிட்டை தயார் செய்கின்றனர்
   3) பெரியவர் மாணவனுக்கு புத்திமதி சொல்கிறார்
   (.............)

3. நிகழ்வு 3 உடன் பொருந்தும் சொற் சேர்மானம்
   1) அலுவலகம் - மாணவன் - கற்றல்
   2) பாடசாலை - மாணவன் - விளையாட்டு
   3) பணிமனை - பணியாளர் - பணி
   (.............)

04. இந்த நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஸ்தாபனங்கள் சிலவற்றின் பெயர்கள் உண்டு. இவற்றுள் ஒன்று தவறானது. அதனைத் தெரிவு செய்க.
நிகழ்வு 1: இலங்கை தபால் சேவைத் திணைக்களம்
நிகழ்வு 1: இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
நிகழ்வு 1: இலங்கை மத்திய போக்குவரத்து சபை
(.............)

❋ மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதற்குரிய இலக்கத்தை அருகேயுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

05. 25/100 என்னும் பகுதி நிழற்றப்பட்டுள்ள உரு



(1) (2) (3) (4)

06. பொருட்கள் வெப்பத்தினால் விரிவடையும் பண்புடையவை. இந்த இயல்பை அடிப்படையாகக்கொண்டு நாளாந்த வாழ்வில் பல்வேறு கருமங்கள் நடைபெறுகின்றன. கீழ்வரும் சந்தர்ப்பங்களில் வெப்பத்தின் விரிவு பயன்படுத்தப்படாத சந்தர்ப்பம் எது?

1) வண்டில் சில்லுக்கு வளையமிடும்போது வளையத்தைச் சூடாக்கல்
2) ரயில் தண்டவாளங்களுக்கிடையே இடைவெளி விடப்பட்டிருத்தல்
3) மோதிரத்தை விரலில் இருந்து கழற்றுவதற்காக மோதிரத்தைச் சூடாக்கல்
4) சோடா மென்பானங்கள் போத்தலில் முழுமையாக நிரப்பப்படாது விடுதல் (..........)


07. விழா ஒன்றில் கலந்துகொண்ட மயூரன் மயக்கமடைந்து விழ அவரை விழவிடாது கண்ணன் தாங்கிப் பிடித்தார். இதை அறிந்த நாகேஸ்வரன் குளிர்நீருடன் மயூரனை நோக்கி வந்தார். குமார் மயூரனைத் தனது காரில் வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்றார்.

1) அந்த விழாவில் கலந்துகொண்ட யாவரும் தமிழராவர்
2) அந்த விழாவில் முஸ்லிம்களும் கலந்துகொண்டனர்.
3. அந்த விழாவில் கலந்துகொண்டவர்கள் பியதாசவின் உறவினர்கள்
4. அந்த விழாவில் பல இன மக்களும் கலந்துகொண்டனர்
(..........)

08. மாலா, கலா, கமலா ஆகிய மூவரும் உயரமான பெண்கள். மயூரன், கண்ணன் இருவரும் உயரம் குறைவான ஆண்கள். மயூரன், கமலா ஆகிய இருவரும் ஐஸ்கிறீம் உண்பதில்லை. இவர்களில் எவர் ஐஸ்கிறீம் உண்பவரும் உயரம் குறைவானவரும் ஆவார்.


1) மயூரன் 2) கண்ணன் 3) மாலா 4) கமலா (..........)

09. கீழ்வரும் உருக்களில் வித்தியாசமான உரு எது?




(1) (2) (3) (4)

10. தானியங்கள், அரிசி, மண்ணெய் என்பவற்றுக்குரிய அடங்கல் வரிப்படம்




(1) (2) (3) (4)

11.





(1) (2) (3)

12.





(1) (2) (3)

13.





(1) (2) (3)

14.




15.




❋ சரியான விடையினைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

16. அசிரியை சசிரேகா கடைக்குச்சென்று 100 ரூபா தாள் காசு ஒன்றைக்கொடுத்து 1 கிலோ 500 கிராம் சீனி, 1 கிலோ அரிசி, 1/2 கிலோ பருப்பு, 1 கிலோ உப்பு ஆகியவற்றை வாங்கினாள். கடைக்காரர் அவளுக்கு மீதிப்பணமாக இரண்டு இரண்டு ரூபாய் குற்றிகளையும், மூன்று 50 சத நாணயம், ஒரு 5 ரூபா நாணயம் ஆகியவற்றை வழங்கினான். ஒரு கிலோ சீனி 30.00 ரூபாவும், ஒரு கிலோ அரிசி 36.00 ரூபாவும், ஒரு கிலோ பருப்பு 36.00 ரூபாவும் எனின் ஒரு கிலோ உப்பின் விலை என்ன?

.........................................................................

17. 18 என்னும் எண் குறிப்பும் உரோமன் இலக்கத்தைப் பெறுவதற்கு 5 தீக்குச்சிகள் தேவை. 22 என்னும் எண் குறிக்கும் உரோமன் இலக்கத்தைப் பெறுவதற்கு எத்தனை தீக்குச்சிகள் தேவை?

.........................................................................


18. ஒரு குற்றச்செயல் இதனைச்செய்ய முயற்சிசெய்தால் தண்டனை கிடைக்கும். ஆனால், செய்து முடித்தாலோ தண்டனை இல்லை. இது என்ன குற்றம்?

.........................................................................

19. 2 மீற்றர் நீளமும் 3 மீற்றர் அகலமும் 6 மீற்றர் உயரமும் கொண்ட குழி ஒன்றிலிருந்து வெட்டி எடுக்கக்கூடிய மண் எவ்வளவு?

.........................................................................

20.





அருகேயுள்ள மணிக்கூட்டின் மணிக்கம்பிக்கும் நிமிடக்கம்பிக்கும் இடைப்பட்ட பகுதி பின்வருவனவற்றுள் எக்கோணத்தால் காட்டப்படும்

1. கூர்ங்கோணம் 2. செங்கோணம்
3. விரிகோணம் 4. நேர்கோணம்

கீழே சில படங்கள் உண்டு. அவற்றை ஒழுங்கு செய்ய ஒரு கதைக் குறிப்பு பூரணமாகும். ஆனால், படங்கள் ஒழுங்காகத் தரப்படவில்லை. ஒழுங்கமைக்கப்பட்ட விடைகளில் சரியான விடையின் இலக்கத்தை அருகேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

21. மீன்பிடிக்கச்சென்ற ஒருவர் பிடித்த எல்லா மீன்களையும் பூனை உண்டமையால் அவர் கவலையுற்றார்.




1) CEBD 2)CEDB 3)CDFH 4)CAGE

❋ கீழ்வரும் தகவல்களை வாசித்து திருத்தமான விடையை எழுதுக.

22. 1)பூனை ஆடு அளவு பெரியதெனின் கூட்டில் S என எழுதுக.
2)ஆடு, பூனையிலும் சிறியதெனில் கூட்டில் U என எழுதுக.
3)ஆடு, பூனை இரண்டும் நாலுகால் உடையவை எனின் கூட்டில் M என எழுதுக.
4)ஆடு, பூனை இரண்டும் முட்டை இடுபவை எனின், கூட்டில் Y என எழுதுக.

23. 1) கறுப்பு நிறமானவையெல்லாம் காகம் எனின் △ இற்கு நிறம் தீட்டுக.
2)மாணவர்களுக்கு 50 வயது இருக்கும் எனின் □ இற்கு நிறம் தீட்டுக.
3)துவிச்சக்கரவண்டிக்கு 4 சில்லு இருக்குமெனின் ○ இற்கு நிறம் தீட்டுக.
4) மனிதர்களில் ஆண்பெண் வேறுபாடு உண்டெனின் ◇ இற்கு நிறம் தீட்டுக. ( △ □ ○ ◇ )

5)அருகே காட்டப்பட்டுள்ளது



1)எங்கள் தேசிய இலச்சினை எனில் புள்ளிக்கோட்டில் மரியாதை என எழுதுக.
2)தேசியக்கொடி எனின் புள்ளிக்கோட்டில் வீரம் என எழுதுக
3)மதச் சின்னம் ஒன்று எனின் புள்ளிக்கோட்டில் வழிபாடு என எழுதுக
4)எல்லா இனத்தவரையும் குறிப்பது எனின் புள்ளிக்கோட்டில் ஒற்றுமை என எழுதுக (.............)

❋ கீழ்வரும் படமானது பாடசாலை வாரமொன்றில் பாடசாலை ஒன்றுக்கு வருகைதந்த மாணவர்களைக் குறிக்கின்றது 0-20 மாணவர்கள்

| | |
|---|---|
| திங்கள் | 0 0 0 0 0 0 0 0 0 0 0 0 |
| செவ்வாய் | 0 0 0 0 0 0 0 0 0 0 0 |
| புதன் | 0 0 0 0 0 0 0 0 0 0 |
| வியாழன் | 0 0 0 0 0 0 0 0 0 0 0 |
| வெள்ளி | 0 0 0 0 0 0 0 0 0 0 0 0 |

இப் படத்தை அவதானித்துச் சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

26. எந்த நாளில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் வருகை தந்தார்கள்? (........)
27. வியாழன் வருகை தந்த மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? (.......)
28. வியாழன் வருகையிலும் எவ்வளவு மாணவர்கள் அதிகமாகத் திங்கள் வருகை தந்தார்கள்? (........)
29. மாணவர் வருகை மிகக் குறைவான நாள் எது? (........)
30. இந்த வாரத்தில் வருகை தந்த மாணவர் எண்ணிக்கையை எழுதுக.

❋ கீழ்வரும் சொற்கூட்டங்களில் ஒன்று வித்தியாசமானது. வித்தியாசமான சொல்லினைக் குறிக்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

31. 1 உடும்பு 2. பல்லி 3. பூனை 4. ஓணான
32. 1 கார் 2. கப்பல் 3. பஸ் 4. லொறி

வியாபாரி ஒருவர் பொருட்களின் விலையைக் குறிப்பதற்கு இரகசியக் குறியீடாக பின்வருமாறு எழுதிவைத்தார்.

| உ | ற | வு | க் | கு | ப | கை | க | ட | ன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 0 |

இதன் அடிப்படையில் சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

33. சேட் ஒன்றின் விலை வுகுன்.ன்ன் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே அதன் விலை?
1)500.00 2)350.00 3)250.00 4)125.55 (...........)

34. ரூபா 750.00 பெறுமதியான பொருள் எவ்வாறு குறிக்கப்பட்டிருக்கும்?
1)மகுன்.ன்ன் 2)வுகுன்.ன்ன்
3)பஉவு.டன் 4)கைகுன்.ன்ன் (...........)

35. பட்டுவேட்டி ஒன்றின் விலை குகைகுன்.ன்ன் எனக் குறிக்கப்பட்டிருப்பின் இதன் விலை?
1)460.00 2)1560.00 3)1780.00 4)5750.00

36. ரூபா 750.00 விலை குறிக்கப்பட்ட பொருளில் பழுது காரணமாக அது ரூபா 550.00 ஆக விற்பனை செய்யப்படவுள்ளது. எனவே மாற்றம் செய்யவேண்டிய எழுத்துக்கள் யாவை?
1)கை.....கு 2)கை......க் 3)ற.....கை 4)கு....ன் (.........)

37. ரூபா 450.00 பெறுமதியான சேட்டு ஒன்றின் விலையைக் குறிக்கும்போது கபன்.ன்ன் என்னும் குறியீடு பயன்படுத்தப்பட்டது. இதில் ஓர் எழுத்து தவறுதலாக எழுதப்பட்டுவிட்டது. அவ்வெழுத்து எது?
1)ப 2)க் 3)ன் 4)க

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்



# G.C.E.O/L English Language

## Part I

**Match A with B Write the correct number in the given bracket Example is Given**

| 1. A | B | |
|---|---|---|
| 1. Filth | Put the money into bank account | ( ) |
| 2. Fertilzer | continue to exist | ( ) |
| 3. Suruive | container | ( ) |
| 4. enormous | disappeared | ( ) |
| 5. deposite | very frighting | ( ) |
| 6. withdraw | very dirty | ( ) |
| 7. picther | extremely big | ( ) |
| 8. vanished | natural or chemical substamce to make plants grow faster | ( ) |
| 9. seaside | taking moneyfrom the bank account | ( ) |
| 10. extracton | process of taking same thir | ( ) |
| 11. terrifying | near sea | ( ) |

**2. complete the sentences using the phrases in the box below**

**(is salty, is very dark, doesn't work, has broken, has shrunk)**

1. The sewing machine ..............................................
2. The zip ..............................................
3. The soup ..............................................
4. The room ..............................................
5. The shirt..............................................

**3. Complete the following sentences by choosing the suitable endings given**

1. I'm trying to learn French..............................................
2. I'm feeling very tired today ..............................................
3. They have got enough money ..............................................
4. I didn't like Mano when I first met him ..............................................
5. Babu has failed his exam ..............................................

a. how ever I really like him now
b. but I have spent all my money
c. because I'm going to France for my next holidays
d. so he will have to take it again
e. so I must go to bed early tonight

**4. Write two short paragraphs-good points and bad points about 'City life'.**

..............................................................................

**5. Your school is going to celebrate 'Tree planting'. You're the secretary of the nature club. Write a notice about it. Include the following.**

a) Date and time
b) About the participants
c) Things should be brought

..............................................................................

**6. Fill in the gaps with correct verb.**

**( taught, toured, didn't know, had toured, came, were caused, found, were told)**

**Helen Keller**

Helen Keller's deafness and blindness (1)........................ by a sever illness when she was a baby. Her parents (2)........................ what to do, and they (3)........................ it difficult to control their growing daughter. One day they (4)........................ about a brilliant young teacher called Anne Sullivan She (5)........................ to work with Helen and, very firmly and patiently (6) ........................ her that every object (7)........................ a name. Eventually Helen (8)........................ a place at University. After this she (9)........................ the world helping people like herself. In 1962 the story of her life (10)........................ into a film, 'The miracle worker.

## படையினர் பனைகளை அழிப்பதை

# பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் நியாயப்படுத்துகிறார்

யாழ். மாவட்டத்தில் பெரு மளவு பனைமரங்கள் இராணுவத் தினரால் தறித்து பதுங்கு குழிகளுக்குப் பயன்படுத்தப்படுவதை பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும், முன்னாள் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சிவதாசன் நியாயப்படுத்தினார்.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பனை அபிவிருத்திச் சபை வேலைத்திட்டங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் நேற்றுமுன் தினம் யாழ். மாவட்ட பனை அபிவிருதிச்சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்து, ஊடகவியாலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தபோது மேலும் தெரிவித்ததாவது-

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினர் பனைகளை அழிப்பதாகக் கூறுகிறார்கள். பொதுமக்களும் அவற்றையழிக்கிறார்கள். இதனைப் பற்றி நீங்கள் யோசிக்கவில்லையா?

இராணுவத்தினரைப் போல் இங்கு பல்வேறு தேவைகளுக்காக பனைகள் தறிக்கப்படுகின்றன. அவற்றை நீங்கள் கருத்தில் எடுக்கவேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பனை, தென்னை வளஅபிவி ருத்தி தொடர்பான ஆய்வுகள், பாடநெறிகள், இதுவரை இடம்பெறாமல் இருப்பது மிகவும் கவலைக்குரியது.

நாம் யாழ். பல்கலைக்கழக தாவரவியல் மாணவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத் தினோம். அவர்கள் பனை அபிவிருத்தி தொடர்பாக புதிய அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளத்தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இத்தகைய முயற்சிகளுக்கு நாம் உதவத் தயாராகவுள்ளோம்.

கடந்த அரசாங்க காலத்தில் கொடுக்கப்பட்ட சீவல் தொழில் புரிபவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் சம்பந்தமான வாக்குறுதியை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளோம்.

திக்கம் வடிசாலை தனக்கென பெருந்தொகை நிதியைத் திரட்டக் காரணமாக இருந்தவர் டக்ளஸ் தேவானந்தா. ஆனால், கடந்த அரசாங்கம் ஆட்சியிலி ருந்தபோது ஓர் அமைச்சர் கோயில்களைக் கட்டவும், ஓட்டோ வாங்கவும் அந்தப் பணத்தை தண்ணியாகச் செலவழித்தார்.

பனை அபிவிருத்திச் சபை சரியான முறையில் புனரமைக்கப்படவில்லை. அதனை நாம் மீண்டும் சிறப்பாக கட்டியெழுப் பத்திட்டமிட்டுள்ளோம்.

எனினும், கடந்த ஆட்சிக் காலப்பகுதியில் பனை அபிவிருத்திச் சபையில் பணியாற்றிய எவரையும் நாம் பழிவாங்க வில்லை, பழிவாங்கவும் மாட்டோம். யாரேனும் பழி வாங்கப்பட்டதாகத் தெரிந்தால், தெரிவிக்கலாம் என்றார்.

இங்கு அவர் உயர்பாதுகாப்பு வல யத்தில் இராணுவத்தால் பனை வெட்டப்படுவதை நியாயப்படுத்தியமையும், ஊடகவியலாளர் ஒருவர் பனை அபிவிருத்திச் சபை பற்றி போதிய அறிவில் லாத நீங்கள் இந்த பதவியை ஏற்றுக்கொண்டீர்கள் எனவும் கேட்டதற்கு, உணர்ச்சிவசப்பட்டு, அவள் அந்த ஊடகவியலாளரை அவமானப்படுத்தியமையும், ஊடகவியலாளர் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியது.

இந்தச்சந்திப்பில், இவருக்கு பாதுகாப்பாக பெருந்தொகை இராணுவத்தினரும், பொலிஸாரும் வந்ததுடன், கொழும்பிலிருந்து பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் ஆர்.குகனேசன், சபையின் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஜே.கே.நிக் கவல்ல ஆகியோர் கலந்துகொண்டனர். இவர்களுடன் யாழ். மாவட்ட பனை அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# நடேசன், நிமால் நினைவாக இதழியல் கற்கை நெறி மன்றம்

## அமைப்பதற்கு பிரபாகரன் திட்டம்

(கிளிநொச்சி)

நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன், நிமலராஜன் போன்ற ஊடகவியலாளர் நினைவாக, இதழியல் கற்கைநெறி மன்றம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்ததாக - தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் புதுக்குடியிருப்பில் நடைபெற்ற படைப்பாளர் கப்டன் வாமகாந் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு பேசியபோதே, பாலகுமாரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன், நிமலராஜன் கற்கைநெறிமன்றம் ஒன்றை உருவாக்கவேண்டும். அதன் மூலம் முதிர்ந்த அறிவுள்ள கோபு, சிவநாயகம் போன்ற இத்ழியலாளர்களை வரவழைத்து அவர்களைக் கௌரவித்து அவர்களின் கருத்துக்களை இளைய தலைமுறைக்கு பரவிச்செல்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என தமிழீழ தேசிய தலைவர் தெரிவித்தார் எனக்குறிப்பிட்டார்.

படைப்பாளி இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னதாக தமிழீழ தேசிய கொடியினை மட்டக்களப்பு, அம்பாறை நிர்வாகச் செயலக பொறுப்பாளர் வர்மன் ஏற்றிவைத்தார்.

கப்டன் வாமக்காந்தின் திருவுருவப்படத்துக்கான சுடர்களை முல்லை வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர், ஈழநாதம் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த சிறி. இந்திரகுமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

# கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்தை புனரமைக்க 30 மில்லியன் தேவை!

கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்தைப் புனரமைப்பதாயின், 30 மில்லியன் ரூபா தேவைப்படும் அபிவிருத்தி சபையின் பொது முகாமையாளர் ஆர்.குகநேசன் தெரிவித்தார்.

கைதடி பனை ஆராய்ச்சி நிலையம் யாழ். மாவட்ட பனை அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்வதற்கு மிகமுக்கியமானபங்கை ஆற்றிவந்தது.

எனினும், கடந்தகால யுத்த அனர்த்தங்களால் அதன் செயற்பாடுகளை இடைநிறுத்தப்பட்டன.

இதனை மீண்டும் செயற்படுத்துவதற்கு கடந்த அரசாங்க காலத்தில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டும், அவை சாத்தியப்படா மல் போயிற்று.

எனவே, தற்போது அதனை மீண்டும் செயற்படுத்த நாம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

அதற்காக சுமார் 30 மில்லியன் ரூபா வரையான நிதி தேவைப்படுவதால், அதனை அரசிடம் எமது அமைச்சினூடாக கோரவிருக் கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வலயப் பணிமனை கட்டடத்துக்கு ஆசிரியர்களிடம் நிதி வசூலிப்பு!

## ~ தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ். மாவட்டத்தின் ஒரு வலயக் கல்விப்பணிப்பாளர் - வலயக் கல்விப் பணிமனைக்கான கட்டடத்தைக் கட்டுவதற்கு, குறித்த வலயத்துக்கு உட்பட்ட பாட சாலையில் சேவைபுரியும் சகல ஊழியர்களும் தமது அரை நாள் முதல் ஒருநாள் வரையிலான வேதனத்தைக் கட்டாயமாக வழங்கவேண்டும் என சட்டத்துக்குப் புறம்பான முறையில் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வலயக் கல்விப்பணிப்பாளரின் சட்டத்துக்குப் புறம்பான மேற்படி உத்தரவை உட னடியாக நீக்கி, இதுவரை ஆசிரியர்களிடம் இருந்து அறவிடப்பட்ட பணத்தை அவர்களிடம் மீள ஒப்படைக்கவேண்டும் எனவும், மேலும், கல்விப் பணிப்பாளரின் இந்த ஏற்றுக்கொள்ளப்பட முடி யாத தீர்மானத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும் இலங் கைத் தமிழர் ஆசிரியர்சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கட்டடம் கட்டுவதா யின் அது அரசாங்கத்தினதும், கல்வி அமைச்சினதும் கடமையாகும். புதிய கட்டடம் தேவையாயின் அரசிடமோ அல்லது ஆசிய அபிவிருத்திவங்கி போன்றவற் றிடமோ கோரிக்கையை உரிய முறையில் முன்வைப்பதன் மூலம் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது அரசாங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் ஒதுக்கீட்டிலிருந்தும் உரிய நிதியைப்பெற முடியும்.

எனவே, இத்தகைய முறையான வழிகளை தவிர்த்துவிட்டு முறையற்றதும், சட்டத்துக்குப் புறம்பானதுமான வழியில் ஆசிரியர்களிடம் நிதிசேகரித்து வலயக் கல்விப்பணிமனைக்கென காணி வாங்குவதோ அல்லது கட்டடம் கட்டுவதோ எந்த வகையிலும் நியாயமற்றது.

எனவே, இத்தகைய நடை முறையைக் குறித்த வலயக்கல்விப் பணிப்பாளர் உடனடி யாக நிறுத்த வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அவருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

(10)

# மாணவர்களுக்கான மதிய உணவு வழங்குவது குறித்து கலந்துரையாடல்

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்குப் பிர தேசப் பாடசாலைகளில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் மதிய உணவு வழங்குவதற்காக அந்த பிரதேசப் பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர்கள் கிராம அலுவலர்கள் ஆகியோருக்கு இந்தத் திட்டம் சம்பந்தமான செயலமர்வுகள் பின்வரும் இடங்களில் நடத்தப்படவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்தார்.

இதன் பிரகாரம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசப் பாடசாலைகளுக்கு எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை குடத்தனை அ.த.க. பாடசாலையிலும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசப் பாடசாலைகளுக்கு எதிர்வரும் 22ஆம் திகதி செவ் வாய்க்கிழமை மருதங்கேணி இ.த.க. பாடசாலையிலும் மு.ப. 9.50 மணிமுதல் பி.ப. 3.30 மணி வரை நடாத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(122)

# வீடுகளை இழந்தவர்களுக்கு உலக வங்கி உதவி

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் யுத்தத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கு உலக வங்கியின் நிதி உதவியுடன் தலா ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருவதாக- மருந்தங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதம் பிள்ளை தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக இந்தப் பிரதேசத்தில் உள்ள ஆழிய வளைக் கிராமத்தில் 25 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கை களில் யாழ். செயலக உயர் அதி காரிகள் மற்றும் பிரதேச செயலக ஊழியர்கள் ஆழியவளைக் கிராம அலுவலர் வி.நடராசா ஆகியோர் இந்தக் கிராமத்தில் கடந்த சில நாட்களாக தங்கியிருந்து உரிய தகவல்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்படி வீடுகள் அடிப்படை வசதிகளுடன் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

(122)

# சின்னஞ்சிறு செய்திகள்

### மாசி மாதத்திற்குரிய நிவாரணம் வழங்கப்படவுள்ளது

வடமராட்சி கிழக்கில மாசி மாதத்துக்குரிய இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

கிராம அலுவலர்கள் மூலம், உலர் உணவு நிவாணம் பெறுவதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

(122)

### தேர்தல் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது

கடந்த பொதுத் தேர்தலில கடமையாற்றியவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த பொதுத் தேர்தலில் கடமையாற்றிய அனைத்து ஊழியர்களுக்குமான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் கல்வி வலையத்துக்கு உட்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் நாளை வழங்கப்படவுள்ளது.

இந்த கொடுப்பனவுகளை புதன் கிழமை காலை முதல் பெற்றுக் கொள்ளலாம் எனத் யாழ். கல்வி வலயம் தெரிவித்துள்ளது.

### தாளையடி அந்தோனியார் ஆலய திருநாள்

(ஆழியவளை)

தாளையடி புனித அந்தோனியார் தேவாலயத் திருநாள் எதிர் வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது. கடந்த 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி ஒவ்வொருநாளும் விசேட வழிபாட் டுப் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

12ஆம் திகதி இரவு நற்கருணை வழிபாடும், 13ஆம் திகதி காலை திருநாள் திருப்பலிப் பூசையும் இடம்பெறவுள்ளது.

(122)

### சீருடைத் துணி பெறுவதில் மாணவர்கள் அசிரத்தை

(ஆழியவளை)

வடமராட்சிப் பிரதேசத்தில் இலவச சீருடை பெறுவதில் மாணவர்கள் அசிரத்தையாக இருப்பதாக கிராம அலுவலர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலான கிராம அலுவலர்களிடம் 50 வீதத்துக்கும் மேற்பட்ட சீருடைகள் விநியோ கிக்கப் படாமல் உள்ளதாக தெரி விக்கப்படுகின்றது. (122)

### அடிக்கல் நாட்டு வைபவம்

(வண்ணை)

சைவ வித்தியாவிருத்திச் நிறை வாழ்வு இல்லத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம் இன்று காலை இடம் பெறவுள்ளது. இதற்கென புதிய காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் நல்லை ஆதினம், ஆறு திருமுருகன் உட்பட பலர் ஆசி வழங்குவார்கள். இந்தக் காணி கொள்வனவுக்கான நிதியை வெளிநாட்டு அன்பர்கள் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(111)

### வலய ரீதியாக கணித மாணவர் குழுக்கள் அமைக்க நடவடிக்கை

(ஆழியவளை)

கல்வி வலயங்கள் தோறும் கணித மாணவர் குழுக்கள் அமைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரி விக்கப்படுகின்றது.

ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் தரம் 9இல் கல்வி கற் கும், கணித பாடத்தில் விசேட திறமையுள்ள மூன்று மாணவர்கள் பெயரை வலயக் கல்வி அலுவல கம் திரட்டு கின்றது.

(122)

# கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் வெடிபொருட்களில் சிக்கி 26 பேர் பலி!

இராணுவ நடவடிக்கையின் போது, வன்னிப் பகுதியில் புதைக் கப்பட்ட வெடிபொருட்களில் சிக்கி, கடந்த நான்கு ஆண்டுகளில் 26 பொது மக்கள் பலியாகி யுள்ளனர்.

இராணுவம் ஆக்கிரமித்தி ருந்த பகுதிகளை பின்னர் விடு தலைப் புலிகள் மீட்டெடுத்த பகுதிகளிலேயே இந்த விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கு அதிகளவு நாட்டம் காட்டுவதும், இதற்கான காரணம் என்று தெரிவிக்கப் படுகிறது.

2000ஆம் ஆண்டு முதல் 119 வெடி விபத்து சம்பவங்கள் இடம் பெற்றுள்ளது இதில் 26 பேர் மரணமாகியும், 233 பேர் காயங் களுக்கும் உள்ளாகி இருப்பதாக வெண்புறா நிறுவனம் தெரிவிதி ருந்தது.

யாழ்ப்பாணம்



# அனுபவமும் ஆழ்ந்த நூலறிவும் தெளிவாகப் பேசுவதற்கு உதவும்

உலகச் சுழற்சிக்கு ஆதார அச்சாக விளங்குவதே பேச்சுத்தான். இன்றைய உலகில் பேச்சே வாழ்வின் மூச்சாக விளங்குகிறது. சுவாசிக்காமல் வாழ முடியாதது போலவே, பேச்சுள்ளவன் பேசாமல் வாழமுடியாது. பேச்சு என்பது, அரிய பெரிய கலை எனலாம். கற்றாரையும், கல்லாதோரையும் கவரவல்ல கலை அது. ஒரு தேசத்தின் முன்னேற்றத்துக்கும், அரசியல் மாற்றங்களுக்கும், சமய விளக்கங்களுக்கும், சமுதாயச் சீர்திருத்தங்களுக்கும் பேச்சுக்களே அவசியமாகின்றது.

பேச்சுக்கலை பற்றி சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்களில் காணமுடிகிறது. நாநலமே சிறந்த நலம் என்பதனை வள்ளுவனாரும் திருக்குறளில்.

நூலறிவின்றி அவையில் ஒருவர் பேசுதல்
அரங்கின்றி வட்டாடுதல் போன்றது

என்றும்,

கல்லாதான் பேச விழைதல் பெண் தன்மை
இல்லாதான் இன்பம் பெற விளைவதை

ஒக்கும் என்றும்

முறைப்படுத்திச் சொல்லவேண்டுவதைச் சொன்னால், உலக மக்கள் விரைத்துக் கேட்பர் என்றும், பேச்சுத்திறன் பற்றி விளக்கியுள்ளார். பேச்சுக்கலைக்கு முத்தாய்ப்பான இடம் மேடைப்பேச்சாகும்.

மேடைபேச்சு வளர்ந்த வரலாற்றை நோக்கின் - மொழி அறிவாளர் கலைகளை ஆராய்வதற்கும், வாது புரிவதற்கும் உரியதாக பட்டிமண்டபங்கள் அந்தக் காலத்திலிருந்தன.

சிலப்பதிகாரத்தில் இவை பற்றிய குறிப்புக்கள் உள்ளன. தண்ணிழற் பந்தரிலும் ஊர் அம்பலத்திலும் அறிஞர் பெருமக்கள் உரை நடத்தியுள்ளனர். சமயவாதிகள் பட்டிமண்டபம் ஏறிப் பகைமையின்றி வாது செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. முற்றக் கற்றறிந்த மூதறிஞர்கள் சொற்போர் புரிந்துள்ளதை பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. அந்தக்காலப் பேச்சுக்கலையில் சொற்பொழிவு முறையைவிட பாட்டுரை விளக்கமும், சமயவாதப் பேச்சுக்களும், உபதேசம் வழங்கலுமே இருந்துள்ளன. ஐம்பெரும் குழு என்ற அவையிலும், எண்பேராயம் என்ற அவையிலும் வாதிடும் வகையில் பேச்சுக்கலை சிறந்துள்ளது.

கிரேக்க நாட்டில் கிமு.4 ஆம் நூற்றாண்டில் குடியாட்சி இருந்தவேளை, டெமாஸ்தனிஸ் என்ற நாவலாசிரியர் தமது நாவன்மையால் பல வெற்றிகளைக் கண்டாரென்கிறது. கிரேக்க வரலாறு கி.மு.2 ஆம் நூற்றாண்டில் குடியாட்சி நிலவிய ரோம் நாட்டில் தமது பேச்சுத்திறனால், சிறந்த நாவன்மையாளர் எனப்பட்டார்.

மார்க்ஸ் டல்லியஸ் சிசிரோ தமது சொற்பொழிவை வீடு பேரிழப்பு (Paradiselost) என்ற காப்பியமாக வடித்திருந்தார். பெருங்கவிஞர் மில்ரன், இதேபோல் கி.பி.18 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் பார்க் என்ற நாவலர் எழுதிய சொற்பொழிவு இலக்கியங்கள் என்றும், தத்துவக் களஞ்சியங்களாக மிளிர்கின்றன.

கி.பி 18 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் கீர்த்தனைகள், கதாகாலட்சேபங்கள் மக்களைக் கவர்ந்ததனால் சமயவாதப் பேச்சு 20 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அருகத் தொடங்கியது.

இசை இணைவதையே மக்கள் பெரிதும் விரும்பினர். 19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவை ஆங்கிலேயர் ஆட்சியினால், ஆங்கிலப் பேச்சுக்கலை தோன்றியது. 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காங்கிரஸ் விடுதலைக் கிளர்ச்சிக்காக மேடையில் தமிழ் மொழி பயன்படுத்தப்பட்டது.

அதனால், மேடைப்பேச்சு வளர்ந்தோங்கியது. இத்தகைய சிறப்புக்குரிய மேடைப் பேச்சிலுள்ள பேச்சுத்திறனுக்கு இயற்கையாய் அமைந்த திறமை, விடாமுயற்சியினால் பெறும் பலன் என இருவகையாய் நோக்கலாம். புலவரெல்லாம் பேச்சாளராகார். பேச்சாளரெல்லாம் புலவராகார்.

ஆர்த்த சபை நூற்றொருவர்
ஆயிரத்து ஒன்றாம் புலவர்

என்று தொடங்கும் வெண்பா மூலம் ஔவை



யார் உயர்ந்த பேச்சாளராய் அமைதல் கருவிலே அமைந்ததிரு என்கிறார். ஆனால்,

உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?

என பட்டினத்தடிகள் குறிப்பிடும்போது முயற்சி செய்தால் மதிக்கத்தக்க பேச்சாளராய் யாரும் மிளிரலாம் என்கின்றார்.

மேடைப்பேச்சில் சிறந்த இலக்கணம் எனப்படுவது மறக்கமுடியாத பேச்சு, மழை நன்றாக இருக்கிறது என்பதற்காக, ஓயாமல் பொழிந்துகொண்டிருப்பது நல்லதல்ல. பேச்சும் அதுபோல்தான். அறிவாலி என்பதற்காக அறுக்கிறார் என்று சொல்லவைக்கக் கூடாது. சிலரது பேச்சு மீண்டும் மீண்டும் கேட்க விருப்பமாய் இருக்கும். தலை சிறந்த பேச்சாளரது பேச்சைக் கேட்க பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வருவர்.

மேடைப் பேச்சுக்கலைக்கு தமிழில் அத்திவாரமிட்டவர் நாவலர். திரு.வி.கல்யாணசுந்தரனார் இவரே மேடைப்பேச்சின் தந்தை எனப்படுகின்றார். திரு.வி.க., திரு.க.வே.ரா. பெரியார், பேரறிஞர் அண்ணா, நாவலர், நெடுஞ்செழியன் ம.பொ.சிவஞானம் ஆகியோரது பேச்சுக்களிலே அமைந்த பண்பு அவர்களது பேச்சுக்களைக்கேட்க ஆவல் ஏற்படக் காரணமாகியது.

வீசும் வாசனையைக்கொண்டு பூக்கள் உணரப்படுவதுபோலவே, பேசுகின்ற வார்த்தைகளைப் பொறுத்தே மனிதர்கள் மதிக்கப்படுகின்றார்கள்.

அழகிய சொற்களை அடுக்கிப் பேசுவதோ, கடல் மடல் திறந்தால்போல சொல்மாரி பொழிவதோ, இடையிடையே இசைபாடி இனிக்கப் பேசுவதோ சிறந்த பேச்சாகாது.

சிறந்த பேச்சை யார் பேசுகின்றார், என்ன பேசுகிறார், எப்படிப் பேசுகிறார் என்பது கவனிக்கற்பாலது. பேச்சாளர்கள் தாம் யாருக்குப் பேசுகிறோம் என்பதைப் புரிந்துகொண்டு, தமது சொந்தச் சிந்தனைகளை வெளிப்படுத்தும்பொழுதுதான், அந்தப்பேச்சு தனித்தன்மை பெற்றுத்திகழும். இதை விடுத்து மேடையில் திரைக்குப் பின்னால் நின்றபடி நிப்பாட்டச் சொல்லியும், நேரக்குறிப்பெழுதி அனுப்பியும், ஒலிவாங்கியை பலவந்தமாக மீளப்பெறப்படுகின்ற அவதியை ஏற்படுத்துவோர் உண்மையான பேச்சாளராக முடியாது.

சொல்லும் கருத்துக்கள் தெளிவாக, அழகான சொற்களில் கொடுக்கப்பட்ட கருவிற்கோ, தர்க்கமுறைக்கோ மாறுபடாது. நேரக்கணிப்பிலிருந்து வழுவாது. அனுபவத்துடன் எடுத்துக்காட்டுகளோடு கேட்பவர் உள்ளத்தில் ஊடுருவுமாறு கேட்போர் உணரும்படி பேச்சு அமைந்திருப்பது பேச்சின் இன்னுமொரு சிறந்த இலக்கணமாகும். பேச்சாளர்களுக்கு தமது பேச்சுக் கருத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கையும், மாற்றமுடியாத உறுதியும் இருந்தால் உணர்ச்சியும தாணாகவரும். உணர்ந்துபேசும் பேச்சைப்போலவே சிறந்த பேச்சுக்கு இன்றியமையாத ஒரு பண்பு கருத்துத் தெளிவாகும். கருத்துத் தெளிவோடு பேசுவதற்கு ஆழ்ந்த நூலறிவும், அனுபவ அறிவுமின்றியமையாதன. தமது பேச்சுமூலம் எதையாவது சாதிக்கவேண்டும் என்பதுபோய், யாரையாவது பாதிக்கவேண்டும் என்ற உணர்வோடு பலர் பேசுகின்றார்கள்.

பேச்சுக்கலை என்பது மேடையில் பேசுவது மட்டுமல்ல. வீடுகளில் பேசுவதும், வீதி

**சித்திரா பீலிக்ஸ்**

களில் பேசுவதும், பயணங்களில் பேசுவதும், பணிபுரியும் இடங்களில் பேசுவதும்கூட ஒரு கலைதான். சமாதானத்தைக் கொண்டுவருவதும், யுத்தங்களைத் தோற்றுவிப்பதும் இந்தப் பேச்சுத்தான். தேவைக்கேற்ற விதத்தில் பயனபடுத்தவேண்டும் என்பதற்காகவே நாக்கு என்ற கருவி வாய் என்ற உறைக்குள் வைக்கப்பட்டுள்ளது. சிறந்த கருத்துக்கள் நேர மதிப்பீடு, அளவான உணர்ச்சி, கவனத்தை ஈர்த்தல், மொழியழகு சொற்பிறளாமை, இனிமை, அளவான எடுகோள் போன்ற பண்புகள் மேடைப்பேச்சுக்கு அவசியமானவை.

மேடைப்பேச்சுப்பற்றி பயிற்சிபெறுவோர் சிறந்த பேச்சுக்குரிய இலக்கணங்களை உள்ளத்தில் உள்வாங்கி பேசத்தொடங்கினால் சிறந்த பேச்சாளராகிவிடலாம்.

*நன்றி:-* தமிழர் தகவல்

# பண்டைக்காலத்தின் பண்பாட்டுக் கோலங்கள் சித்திரங்களாகவும், சிற்பங்களாகவும் உள்ளன

உடலுக்குள் உயிர் ஊஞ்சலாடிக்கொண்டு இருக்கின்றது. அந்த ஊசலை ஊஞ்சலாக்க வல்லது கலை. ஒரு கலைக்கு இன்னுமொரு கலை பக்கத்துணையாக வருவதைக் காணலாம். இசையை எடுத்துக்கொண்டால் அங்கே பக்கவாத்தியங்கள் பக்கத்துணையாக இருக்கும். பரதத்தை எடுத்துக்கொண்டால் அது தாளத்துடன் ஒன்றிநிற்கும். நாடகத்தை எடுத்துக் கொண்டால் ஒப்பனைக்குள்ளால் முகம் காட்டும். சித்திரமும் சிற்பமும் கூட உலகின் எல்லாக் கலைகளையும் உள்வாங்கிக்கொள்ளும். இருப்பினும், தன் கலை சிறக்க வேறும் சில கலைகளைக் காதலிக்கவும் செய்வார்கள். வாழ்வில் காதலன். காதலி வாய்ப்பது போல் கலைஞர்களுக்கும் தன் கலைக்கு ஒத்த காதலனாக, காதலியாக பிறிதொரு கலை அவர்களுள் ஆட்சி கொள்ளும்.

காதல் என்றும் இளமையாக உள்ளது. அத்துடன், அந்த உணர்வுக்கு இருக்கும் சக்தி உந்துதல் அளப்பரியது. எனவே, ஒரு கலைஞனுக்குள் தென்றலாக, காதலாக ஒரு பிற கலையும் அவனுள் வீசிக்கொண்டேதான் இருக்கும்.

சிலரைப் பார்த்தால் பாடிக்கொண்டே படம் வரைவார்கள். சிலர் பாடலைக் கேட்டுக் கொண்டே சித்திரம் தீட்டுவார்கள். கவிஞர்

**"வெற்றிமணி" மு.க.சு.சிவகுமாரன்**

களைப் பாருங்கள் அவர்கள் இயற்கையோடு ஒன்றிநிற்கும்வேளையில் பிறக்கும் கவிதைகள் எவ்வளவு சக்திமிக்கனவாகத் திகழ்கின்றன. கடற்கரையிலும், நதிக்கரையிலும் புலவர்கள் எழுத்தாணிகொண்டு எழுதும் பண்டைக்கால ஓவியங்களைப் பார்த்திருப்பீர்கள்.

கடலின அலைக்கும், நதியின் சலசலப்புக்கும் ஒரு ஜதிக்கட்டு உண்டு. காற்றின் விசைக்கும், ஆடும் தென்னை மரத்தில் கூட ஒரு அடவுக் கணக்கு உண்டு. இடப்பக்கம் சாய்ந்து, வலப்பக்கம் சாயும்போது அதன் வீச்சில் ஒரு சீரான தூரமும், வேகமும் இருக்கும். கடல் அலை ஒன்று மேலெழுந்து கீழ் குதிக்கிறது என்றால், அந்த எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும் ஒரு சீரான அளவு உண்டு. காட்சிகளை விடுங்கள் மனிதனின் இதயத் துடிப்பைப் பாருங்கள். அதன் துடிப்பின் சீர்நிலை குலையும்போது, உடலாரோக்கியம் குன்றுகின்றது.

இது மனிதனுக்கு மட்டுமல்ல, மனிதன் படைக்கும் கலைக்கும் பொருந்தும். எனவே, ஒரு கலைஞனை இந்தச் சீரான வீச்சுக்களே சீரோடும், சிறப்போடும் கலைபடைக்க வைத்திருக்கின்றன.

பரதக்கலையை எடுத்துக்கொண்டால், பரதத்தின் ஒவ்வொரு அசைவுக்கும் ஒரு லயததில் இருக்கும். காற்றின அசைவில் ஒரு மலர் எப்படி அசையுமோ அதுபோல் பரதத்திலும் உடல் அசைவுகள் இருக்கும். இடது பக்கம் மூன்று அடைவும், வலது பக்கம் நான்கு அடைவும் இருக்காது. இடை இடப்பக்கம் நெளிந்தால் அதன் எதிர்ப்புறமாக வலப் பக்கத்தில் ஒரு வளைவு இடப்பக்கத்தில் ஏற்படுத்திய நெளிவுக்கு ஏற்ப இருக்கும்.

ஒரு பெண் பரதத்தில் பொட்டு வைக்கிறாள் என்றால், அதில் ஒரு கரம் தலைக்குப் பின்னால் இருந்து நெற்றியைச் சுட்டிவரும். மறுகை முன்னே ஒரு வளைவாக வந்து கண்ணாடி பார்க்கும். இந்தக் காட்சியினை கண்முன் நிறுத்திப்பாருங்கள். அந்தப் பொட்டு உங்கள் நெஞ்சைத் தொட்டு நிற்கும். நிலவைப் பாடாத கவிஞனும் இல்லை. இந்தப் பொட்டு வைக்கும் காட்சியைத் தீட்டாத, செதுக்காத ஓவியனும் இல்லை சிற்பியும் இல்லை.

பரதம் சித்திரத்திற்குள்ளும், சித்திரம் பரதத்திற்குள்ளும் ஒன்றாகக் கிடக்கிறது. பண்டைக்காலத்தின் பண்பாட்டுக் கோலங்கள் சிற்பங்களாகவும், சித்திரங்களாகவும் கணினியில் பதித்துவைத்து இன்று பாதுகாப்பாகத் தந்த பெருமை இந்தச் சித்திரத்திற்கு உண்டல்லவா!

சின்ன வயதில் பாடசாலைக் காலத்தில் சின்னஞ்சிறு மலர்கள் பாடசாலையில் பரதம் பயிலும்வேளை, அதில் மயங்கி நிற்பேன். அந்தச் சின்னஞ்சிறு பெண்போலே சிற்றாடை தனை உடுத்தி சிவகங்கைக் கரையினிலே சித்திரமாய் நான் நிற்பேன்.

வகுப்பு நேரம் என்னடா! பெட்டையளைப் பார்த்துக்கொண்டு நிக்கிறாயா? என்று என் சித்திர ஆசிரியர் ஓங்கி அடிமட்டத்தால் என் குண்டியில் ஒரு அடி (மன்னிக்கவும் அந்தச் சொல்லைத் தவிர இந்த இடத்தில் எந்தச் சொல்லும் அந்த வயதிற்குப் பொருந்தாது) திடுக்கிட்டுப்போய் சுயநினைவுக்கு வந்த என்னை உள்ளே இருந்து பரத ஆசிரியர் அழைத்தார். பெண்களுக்கு பரதம் முடியும் வரை முழங்காலில் நிற்கும்படி பணித்தார். அவர் எனக்குத் தண்டனை தருவதாக எண்ணி அப்படிச் செய்தார். எனக்கு அது ஒரு பெரு விருந்தாகத் தெரிந்தது. முழங்கால் வலி கூடத் தெரியவில்லை.

ஒவ்வொரு சினனச சின்ன அசைவையும் உள்வாங்கிக்கொண்டே இருந்தேன். அவர்களின் நடனத்திற்குப் பின்னால் சிவனின் பெரிய ஒரு சிவதாண்டவக் காட்சியும் இருந்தது. சிவனின் தலையில் இருபுறமும் அலையாகச் செல்லும் அந்தச் சடாமுடியின் அசைவும், கீழே பயின்றுகொண்டு இருக்கும் மாணவனினது கூந்தலின் அசைவை ஒத்திருந்தது.

வகுப்புமுடிந்து நான்காவது பாடமாக எனக்கு ஓவியப்பாடம் வந்தது. நீங்கள் விரும்பும் காட்சியினை வரையுங்கள் என்று எனக்கு சித்திர ஆசிரியர் கூறினார்.

நேற்றுத்தான் பாடசாலையில் சரஸ்வதிப் பூசை முடிந்து வாழைவெட்டும் நடந்திருந்தது. அது எல்லோரது நெஞ்சிலும் நிறைந்திருந்தது. சிலர் நவராத்திரிக்கு கொலுவைத்திருக்கும் பொம்மைகளையும், வரைந்தார்கள். சித்திரங்கள் யாவும் சரஸ்வதி பூஜையாகவே இருந்தது. எல்லோரது சித்திரங்களையும் பார்த்த ஆசிரியருக்கு என் சித்திரத்தைக் கண்டதும் வியந்துபோனார்.

அப்படியே குனிந்து என்னை அணைத்துகொண்டு மன்னித்துக்கொள்ளடா. நான், நீ பெட்டைகளைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாய் என்று அடித்துவிட்டேன். உன் மனசு எங்கு, எதில் இருந்தது என்பதைக் காட்டிவிட்டாய் என்று சொல்லியபடியே என்னை உற்று நோக்கினார்.

அந்த நோக்கலில் அவரிடம் அன்பு மட்டுமல்ல அவரது ஓவியக்கலையும், சிற்பக் கலையும் உருகி என்னுல் வார்க்கப்பட்டுக் கொண்டதை உணர்ந்துகொண்டேன். அந்த உன்னதக் கலைஞன்தான் என் குரு. ஈழத்தில் பிறந்து உலகுக்கு ஒளிபரப்பிய சித்திர சிற்பக் கலைஞர் கலாகேசரி ஆ.தம்பித்துரை.

இந்தச் சம்பவம் நடந்து 16 வருடங்களுக்குப்பின் களனிப் பல்கலைக்கழகத்தில் சித்திரமும், சிற்பமும் படிக்கின்றவேளையில் எங்கள் விரிவுரையாளர்கள் எங்களை கடற்கரைக்கும், நதிக்கரைக்கும் பதிலாக அந்தக் கடலும் நதியும் சங்கமிக்கும் பரதக் கலைக்குள் எம்மை அழைத்துச் சென்றார்கள். மாதவியின் நடன ஆற்றலை வியந்துரைப்பார்கள். மாதவியின் பரதக்கலை புறத்தை மட்டுமல்ல, அகத்தையும் அலங்கரித்துவிட்டது. அதனாலோ என்னவோ எனக்கு புனைபெயராக அந்த மாதவியே வந்து விட்டாள்.



பரதத்தைப் பற்றிப் பேசுவதற்குக்கூட பரதம் 2000 ஆண்டு பழமை வாய்ந்தது என்று மட்டும் தொடஙகத்தேவையில்லை பரதம் புதுமை வாய்ந் தது அந்த மாதவியே வந்து விட்டாள்.

தமிழில் தான் பரதம் சித்திரத்துடன் உறவாடு கிறது. என்று பார்த்தால். சிங்களத்திலும் நடனம் தான் உறவாடியது. வாரத்தில் இரு முறை நடனத்தினைக்காண நுண்கலைக் கூடத்திற்குச் செல்வோம் அங்கே நடனமாடும் ஆண்களையும், பெண்களையும் வரைவோம். வியர்வைத்துளிகள் நெற்றியில் மணிமணி யாக, அவளை அல்லது அவனை விட்டு நிலத்தில் விழுவோம்! இல்லை விடுவோமா!, என்று துடித்துக்கொண்டு இருக்கும் அந்தக் கணத்தில், அவர்களின் முகத்தில் கூந்தலில் விடுதலைபெற்ற சில மயிர்கள் வந்து ஒட்டிக்கொள்ளும் இடையினில் இருந்த அந்த ஷாலை அவிட்டு முகத்தை ஒரு முறை ஒற்றி விட்டு மீண்டும் இடையினில் வரிந்து கட்டிக் கொள்ளும் அந்த நிலையில், அங்கு பிரமன் படைத்த அத்தனை பெண்களுமே சிறப்புச் சித்தி அடைந்து விடுவார்கள்.

ஓவியர்களில் வர்ணங்களையும், கோடுகளே ஆட்சிபுரியும், உயிரைத் தொட்டுச் செல்லும் அந்தக் கோடுகள் உருவத்தில் இருந்து புறப்பட்டு இயற்கையும் கலப்பானவாக, காட்சிகளுடன் சங்கமிப்பவையாக இருக்கும்.

பரதத்தையும். நடனத்தையும் இரசிக்கும் கலைஞனின் சித்திரமும், சிற்பமும் ஒருபோதும் அசையாத சித்திரங்களைத் தருவதில்லை சித்திரமும் எப்பவும் அசைவனவாக இருக்க வேண்டும். பிடித்துவைத்த பிள்ளையார் மாதிரி இருக்கக்கூடாது. உண்மையான கலைஞன் ஒரு பிள்ளையார் பிடித்தால் அந்தப் பிள்ளையார் கூட பிடித்த இடத்தில் இருக்கமாட்டார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்

திருக்குறள்

# நமது நோக்கு

## விரும்பத்தகாத மீள் நியமனங்கள்

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்கள் இருப்பதாக அவ்வப்போது புள்ளி விபரங்கள் வெளியிடப்படுகின்றன.

ஆனால், இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு எந்த நடவடிக்கையும் உருப்படியாகச் செய்யப்படவில்லை. ஆசிரியர் ஆட்சேர்ப்பு நடத்தப்படாமைக்கு சர்வதேச நிதி நிறுவனங்கள் அதிகாரம் வழங்கவில்லையென்றும், போதிய நிதி வசதி இல்லையென்றும் அரசதரப்பில் நியாயங்கள் கற்பிக்கப்பட்டன.

ஆனால், ஐயாயிரம் தமிழ்மொழிமூல ஆசிரியர்களுக்கு பாடசாலைகளில் வெற்றிடம் இருப்பதால் மாணவர்களின் கல்வி நிலை மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை அரசாங்கம் இதுவரை சிந்திக்காமலேயே இருந்து வந்தது.

இந்தநிலையில், வடக்கு கிழக்குப் பகுதிகளில் கல்வி கற்கும் ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதிலும், குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகள் மற்றும் பின்தங்கிய பிரதேசங்களில் கல்வி கற்கும் மாணவர்கள்தான் மோசமான பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புமாறு கோரி பல்வேறு மட்டங்களில் இருந்து கோரிக்கைகள் விடப்பட்ட போதெல்லாம் அதற்கு உரிய கரிசனை காட்டப்படவில்லை.

இப்போது புதிதாகப் பதவிக்கு வந்திருக்கும் அரசாங்கம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்போவதாகக் கூறிக்கொண்டு நேர்முகப்பரீட்சைகளை நடத்தி வருகிறது.

இந்த ஆட்சேர்ப்பின் மூலம் வடக்கு - கிழக்கிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் முழுமையாக நிரப்பப்படும் என்ற எதிர்பார்ப்பு நிறைந்திருக்கும் இந்தவேளையில்தான் ஓய்வுபெற்ற ஆசிரியர்களை அந்த வெற்றிடங்களுக்கு நியமிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கும் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனாவுக்கும் இடையில் நடந்த சந்திப்பில்தான் இந்த முடிவு எட்டப்பட்டிருந்தது.

பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு ஓய்வுபெற்ற ஆசிரியர்களை நியமிப்பதற்கான யோசனைகளை தமிழர் ஆசிரியர் சங்கமே முன்வைத்ததாகத் தெரியவருகிறது. இதற்கு அசோக ஜெயவர்த்தன இணக்கம் தெரிவித்திருக்கிறார்.

இப்போதுள்ள சூழலில், பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியது மிக மிக அவசரமான நடவடிக்கையே.

இந்தவகையில், தமிழர் ஆசிரியர் சங்கம் ஆளுநருக்கு நெருக்குதல் கொடுத்திருப்பதும் இத்தகைய ஆட்சேர்ப்புக்கு அனுமதி பெற்றிருப்பதும் வரவேற்கத்தக்கதே.

ஆனால், ஓய்வுபெற்றவர்களை மீள்நியமனம் வழங்கும் திட்டத்தை முன்வைத்து அதற்கு அனுமதி பெற்றிருப்பது தான் இளைய சமூகத்தை விசனத்திற்கு உட்படுத்தியிருக்கிறது.

அரசாங்க சேவையில் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கும் அதேவேளை - ஓய்வுபெற்ற பின்னரும், கதிரைகளைக் கட்டிப்பிடித்துக்கொண்டு இருக்கும் மீள்நியமனம் பெற்றவர்களாலும் புதிய ஆட்சேர்ப்புக்கள் தாமதமடைகின்றன.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இதையிட்டு கவலைபபடுகிறதோ இல்லையோ - ஓய்வுபெற்ற பின்னர், மீள்நியமனம் பெற்ற ஊழியர்களால் பெரும் பிரச்சினைகளை சமூகம் எதிர்கொள்கிறது.

ஓய்வுக்குப் பின்னரும், ஒரு ஊழியர் பணியில் இருப்பதால்- அந்த இடத்தை நிரப்பவேண்டிய இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி நடுத்தெருவில் நிற்க நேரிடுகின்றது.

இன்றைய வேலையின்மை நெருக்கடிக்கு, மீள்நியமனம் வழங்கலும் ஒரு காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

இப்படிப்பட்ட நிலையில், அரசாங்கம் நிரந்தரமாக வேலை வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாகக்கூறும் அதேவேளை -


மீள்நியமனம் என்ற பெயரில் ஓய்வுபெற்றவர்களைச் சேவைக்கு அமர்த்துவது இளைஞர் சமூகத்துக்கு தொடர்ந்தும் வேலைவாய்ப்பு நெருக்கடியைக் கொடுப்பதாகவே அமையும்.

இதையிட்டு, மகாகாண ஆளுநர் கவலைப்பட்டாரோ இல்லையோ என்பதல்ல முக்கியம். இப்படிப்பட்டதொரு மோசமான செயல் குறித்து தமிழர் ஆசிரியர் சங்கம் சிந்திக்காததே பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

வடக்கு - கிழக்கில் ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு எந்தளவுக்கு அலட்சியமும், அவசரமும் இருந்து வந்ததோ- அந்தளவுக்கு வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு வேலை வழங்குவதும் அவசரமும், அவசியமுமானதாகும்.

சம்பந்தப்பட்டவர்கள் இதையிட்டு உடன் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் வீண் பழியைச் சுமக்க நேரிடும்.

## நாடும் நடப்பும்




# பேறுகால விடுமுறை உரிமை மறுக்கப்படுவதாக குற்றச்சாட்டு

## உடன் நிறுத்துமாறு மகாசிவம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் ஒரு வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலையில் கடமையாற்றும் பெண் ஆசிரியை மகப்பேற்று விடுமுறையில் செல்லும் போது, தமது நேரசூசியின்படி தாம் கற்பித்த பாடங்களை தாம் மகப்பேற்று விடுமுறையில் நிற்கும் காலப்பகுதி முழுவதற்கும் ஒரு தற்காலிக ஆசிரியை தாமே பாடசாலைக்கு வழங்குவதுடன், அவ்வாறு இருந்தும் மாதாந்தம் ரூபா 500 முதல் ரூபா 1000 வரை செலுத்த வேண்டும்என குறித்த வலயக்கல்விப்பணிப்பாளராலும், உரிய பாடசாலைகளின் அதிபர்களாலும் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

அரசாங்கமே ஒரு பெண் ஆசிரியை தாய்மை அடையும்போது, அவர் தமது குழந்தையை நல்ல முறையில் பிரசவிக்கவும், அதனைத் தொடர்ந்து அந்தப் பிள்ளையை குறிப்பிட்ட காலம் வரை உரியமுறையில் பராமரிக்கவும் வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, பேறுகால விடுமுறையை முழுமையான சம்பளத துடன் வழங்கி உள்ளது. அவ்வாறு இருக்க, குழந்தைப் பேறு என்பது ஒரு குற்றம் போலவும், அது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒரு விடயம் போலவும் கருதி மேற்குறித்த நிர்ப்பந்தத்தை பெண் ஆசிரியர்கள் மீது திணிப்புதை சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் கூறினார்.

பேறுகால விடுமுறைக்கான அரசாங்க சுற்றறிக்கைக்கு மாறாகவும், சட்டரீதியற்ற முறையிலும், மனிதாபிமான நடைமுறைக்கும் மாறாகவும், குறித்த வலயக்கல்விப்பணிப்பாளர், மற்றும் குறித்த பாடசாலை அதிபர்கள் ஆகியோரால மேற்கொள்ளப்படும். இந்த நடைமுறையை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் இவர்களுக்கு எதிராக சங்கம் சடட ரீதியான நடவடிக்கையில் இறங்கும் என்றும் பொதுச் செயலாளர் த.மகாசிவம் மேலும் கருத்து தெரிவித்தார்.

இதேவேளை இது தொடர்பில் தமது எழுத்து மூல அறிவிப்பு குறித்த தரப்பினருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (10)

## வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

இருபாலை, இராச வீதி ஆகிய பகுதிகளில் வாழும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு யாழ். மாவட்ட தேசிய எழுசசிப் பேரவையினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த கால இராணுவ நடவடிக்கை மற்றும் இடம் பெயர்வு என்பவற்றால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும மாணவர்களின் கல்வி மேம்பாடுகளை கருத்திற் கொண்டே இவை வழங்கப்பட்டுள்ளன.

இருபாலை கதிரொளி சனசமூக நிலையத்திலும், இராசவீதி இராஜன் சனசமூக நிலையத்தின் ஊடாக யாழ். மாவட்ட தேசிய எழுசசிப் பேரவையினரால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செயயப்பட்டன. (17)

## வாகை மரம் தறிக்கப்பட்டது தொடர்பாக இன்று கல்வித் திணைக்களத்தில் விசாரணை

செங்குந்தா இந்துக் கல்லூரியில் காணப்பட்ட வாகைமரம் தறிக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகள் இன்று காலை 9.00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்திலுள்ள மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற உள்ளது.

செங்குந்தா இந்துக் கல்லூரியில் காணப்பட்ட வாகை மரம் சட்டவிரோதமாக தறிக்கப்பட்டதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்து, மாகாணக் கல்விப் பணிப்பாளர் இது தொடர்பான விசாரனைகளை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி யாழ்பாணம் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

இதனையடுத்தே, யாழ்ப்பாணம் மேலதிக மாகாணக் கல்விபபணிப்பாளர் முன்னிலையில் இந்த விசாரனை இன்று இடம் பெறவுள்ளது.

## மெல்லக்கற்போரின் கல்வி மேம்பாட்டுக்கு யுனிசெவ் 4.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

(வடமராட்சி)

யுனிசெவ் நிறுவனம் மெல்லக்கற்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 4.5 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதனடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட இரண்டாயிரம் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி அறிவை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. 6 ஆம் வகுப்பு மாணவர்களிடையே பரீட்சையொன்று வைக்கப்பட்டு, அதிலிருந்து 2 ஆயிரம் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவ்வாறு தெரிவுசெய்யப்படும் மெலலக் கற்கும் மாணவர்களுக்கு 7 ஆம் வகுப்பிலிருந்து விசேட கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்துடன், கைநூலும் வழங்கப் படவுள்ளது.

இது சம்பந்தமாக நல்லூரிலுள்ள கல்வி வலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூட்டமொன்று நடைபெற்றது. இத் திட்டம் தொடர்பாக இறுதி வரைபுகளை வகுத்துக் கொள்ளும் வகையில் மற்றுமோர் கூட்டமொன்று இன்று இடம் பெறவுள்ளதாகவும், அதில் யுனிசெவ் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## தென்னிலங்கை கவிதைகள் நாளை அறிமுக விழா

(வடமராட்சி)

கவிஞர் சோ.பத்மநாதனின் 'தென்னிலங்கை கவிதைகள்' நூல் அறிமுகவிழா புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலை மண்டபத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறவுள்ளது.

வாழ்த்துரையை சிவசிறி தியாக சோமசுந்தரக் குருக்களும், வரவேற்புரையை எம்.பகீதரனும் நிகழ்த்துவர்.

அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக கல்வியற்துறை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி நிகழ்த்துவார். மூதறிஞர் இலக்கியகலாநிதி மதுரைப் பண்டிதர் கே.சச்சிதானந்தம் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்வார். (17)

# காணாமற் போனோர் விசாரணை இன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைதடிப் பகுதியில் 1996 ஆம் ஆண்டு காணாமற்போன 24 பேர் தொடர்பான விசாரணைகள் இன்று சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெறவுள்ளன.

இதில் காணாமற் போனவர்கள் சார்பாக நதிக்கும, மனித உரிமைகளுக்குமான சட்ட ஆலோசனைகள் சட்டத்தரணி றெமீடியஸ் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜராகவுள்ளார்.

இதேவேளை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள சந்திரிகா அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பேரணிப் போராட்டத்திற்கு காணாமற் போனோர் - பெற்றோர்குடும்ப அங்கத்தவர் அமைப்பு முழு ஆதரவு வழங்குவதாக அந்த அமைப்பின் வடமாகாண இணைப்பதிகாரி சிதம்பரமோகன் தெரிவித்தார்.

இந்தப் பேரணிப் போராட்டத்திற்கு முழுமையான ஆதரவினை வழங்குவதனூடாக காணாமற்போனோர் பெற்றோர் பாது காவலர் சங்கமும் அதிருப்தியைத் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்



செய்திக் கட்டுரை - அஸ்மிதா

# மருத்துவ வசதிகளின்றித் தவிக்கும் வடமராட்சி கிழக்கு மக்கள்

வடமராட்சி கிழக்குப்பகுதி மக்களுக்கு எப்போது, சீரான சுகாதார வசதி கிடைக்கும் என்பது கேள்விக்குறியாகத்தான் உள்ளது.

இந்தப் பிரதேசம் 32 மைல் நீளமுள்ள ஒரு நீண்ட பிரதேசமாகும். இங்குள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளிலும், சுமார் நாலாயிரம் குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள். 10 கிராம அலுவலர் பிரிவுகள் மீள் குடியேற்றம் நடைபெற்ற பகுதியாகும். மூன்று கிராம அலுவலர் பிரிவுகள் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ளதால் அங்கு மக்கள் மீளக் குடியேறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஐந்து கிராம அலுவலர் பிரிவுகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளது.

இந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கென மூன்று வைத்தியசாலைகள் முன்னர் இயங்கி வந்தது. கட்டைக்காடு, வெற்றிலைக் கேணி, கேவில், போக்கறுப்பு, சுண்டிக்குளம் பகுதி வாழ்மக்களுக்கென முள்ளியானில் மருந்தகம் ஒன்று இயங்கி வந்தது. நிரந்தர வைத்தியர் ஒருவர் தங்கிநின்று வைத்தியம் செய்து வந்தார். 1999 ஆம் ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்து 2002 ஆம் ஆண்டு மீளக்குடியேறச் சென்றபோது மருந்தகம் இருந்த இடத்தினையே காணமுடியவில்லை. கட்டடங்கள் முற்றாக அழிக்கப்பட்டிருந்தன. இந்த மருந்தகத்தினை இயங்கச் செய்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. முள்ளியான் பிரதேச மக்களின் நன்மை கருதி முள்ளியான் மருந்தகத்தினை இயங்கச்செய்யவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் உதவி அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.

அடுத்தது அம்பன் மத்தியமருந்தகம், மணற்காடு, குடத்தனை, நாகர்கோவில் பகுதி மக்களுக்கு இந்த மருந்தகம் அளப்பரிய சேவையினை ஆற்றிவந்தது. இந்த மருந்தகத்தில் வசதியான பிரசவ விடுதியும் அமைந்திருந்ததால், வடமராட்சி கிழக்குப் பகுதி கர்ப்பிணிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இந்த மருந்தகம் அமைந்திருந்தது.

இரண்டாயிரம் ஆண்டு வரை எவ்வித பிரச்சினையும் இல்லாமல் இயங்கி வந்த இந்த மருந்தகம் அதன் பின்னர் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் கொண்டு செல்லப்பட்டு, அங்கு இராணுவத்தினர் முகாமிட்டிருந்தனர். பொது அமைப்புக்களினதும், அந்தப் பகுதி மக்களினதும் கோரிக்கைகளையடுத்து அம்பன் மத்திய மருந்தகத்தை இராணுவத்தினர் சுகாதாரத் திணைக்களத்திடம் கையளித்தனர். சில திருத்த வேலைகள் செய்யப்பட்ட பின்னர் இந்த மருந்துவமனை உடனடியாக இயங்கும் எனக் கூறப்பட்டு பல மாதங்களாகிவிட்டது. இந்தமருதத்துவமனையில் இதுவரை எவ்வித திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த மருந்துவமனை குடத்தனை தென்னிந்திய திருச்சபையில் மூன்று நாட்கள் இயங்கி வருகின்றது. இந்த நிலைமை காரணமாக அம்பன், குடத்தனை, மணற்காடு பகுதி மக்கள் சுகாதார சேவையினைப் பெறுவதற்கு, பருத்தித்துறைக்கு வரவேண்டியுள்ளது. இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்ட இந்த மருத்துவமனையை திருத்தி அமைத்து, மீள இயக்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை முற்றாக அழிக்கப்படடது. இந்த வைத்தியாலையைப் புனரமைப்பதற்கு நிகொட் நிறுவனம் 2 கோடியே 30 இலட்சம் ரூபாவை வழங்கி வேலைகள் முடி வுறும் தறுவாயில் உள்ளது.

மருதங்கேணி வைத்தியசாலை இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து தனியார் கட்டடமொன்றில் வசதிகுறைந்த நிலையில் இயங்கி வருகின்றது. நிகொட் நிறுவனத்தினால், புனரமைக்கப்பட்டுவரும் இந்த வைத்தியசாலை திறக்கப்பட்ட பின்பு இந்தப் பிரதேச மக்கள் ஓரளவு ஆறுதலடைவார்கள் என நம்பப்படுகின்றது. 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்த வைத்தியசாலை ஆழியவளையில் நடமாடும் வைத்தியசேவையினையும் ஆற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. வேலைகள் முடிவுறும் தறுவாயிலுள்ள இந்த வைத்தியசாலையின் புனரமைப்புப் பணி இறுதிக் கட்டத்தில் ஆமை வேகத்தில் நகர்ந்து செல்வதை காணக்கூடியதாக உள்ளது.

இந்தப் பிரதேசத்திலுள்ள நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு பெருமளவு பணம் கொடுத்து தனியார் வாகனங்களில் செல்லவேண்டியுள்ளது. இதனால், வறிய நிலையிலுள்ள குடும்பங்கள் பெருமளவு அவல நிலைக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பிரதேசத்தின் வீதிகள் திருத்தி அமைக்கப்படாததும், வாகனக்கூலி அதிகரிப்புக்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு நேரங்களில் மேலதிக சிகிச்சைக்காக முகமாலையினூடாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் இந்தப் பகுதி நோயாளாகள் துன்பப்படுகின்றார்கள்.

தற்போது புனரமைக்கப்பட்டு வரும் இந்த வைத்தியசாலைக்கு நிகொட் நிறுவனத்தினால் அம்புலன்ஸ் வண்டி ஒன்று வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அம்புலன்ஸ் வண்டி இருக்குமானால், ஏழை நோயாளர்கள் படும் அவலங்கள் நீங்கிவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மாமுனை, கட்டைக்காடு, ஆழியவளை, பொற்பதி போன்ற இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை அமைப்பதற்குரிய காணிகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. ஆனால், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் பணி இன்னமும் ஆரம்பமாகவில்லை.

இந்தப் பிரதேச மக்களின் சுகாதார சேவையினை ஆழியவளையில் இயங்கிவரும் திலீபன் மருத்துவ சேவையினர் வழங்கி வருவது பாராட்டத்தக்கது. மக்கள் மீளக்குடியேறத் தொடங்கிய அதேவேளை, திலீபன் மருத்துவமனையும் அந்தப் பிரதேசத்தில் திறக்கப்பட்டது.

மேலும், இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளையினரால் கடந்த வருடம் ஆறு மாதங்கள் நடமாடும் வைத்தியசேவையினை மாமுனை, உடுத்துறை, கட்டைக்காடு ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டது. அந்தச் சேவையை இந்த வருடமும் நடாத்துவதற்கு உரிய வர்கள் ஆவன செய்யவேண்டும் என அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்களுக்கு சீரான சுகாதார வசதி கிடைக்க வேண்டுமெனில், மருதங்கேணி வைத்தியசாலையின் புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மிகவிரைவில் திறக்கப்பட வேண்டும். அம்புலன்ஸ் வண்டியும் கொடுக்கப்பட வேண்டும்.

அதேபோல், அம்பன் மருத்துவமனையும் திருத்தி அமைக்கப்பட்டு முன்னர் போல் இயங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மேலும், முள்ளியான் மருந்தகமும் புனரமைக்கப்படவேண்டும். சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், உதவி அரசாங்க அதிபர் உட்பட சகல தரப்பினரும் அக்கறை கொண்டு இந்தப் பிரதேச மக்களின் சுகாதார வசதியினை காலம் தாழ்த்தாது சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும என வடமராட்சிக் கிழக்குப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (122)

அரசியல் கட்டுரை கனகரவி

# அடக்கம் செய்யப்படுகிறோம் இரண்டு பெட்டிகளில்

அவளை நல்லவள். எல்லாம் நல்லதுகளுக்குத் தான் செய்யிறாள். எண்டு நினைச்சால் இவளவு மோசமானவளாயிருப்பாளென்று நினைக்கவில்லையடி. குங்குமத்தில் பார்க்க சித்திதான் நல்லாப்போகுது. இல்லை இல்லை காவயாஞ்சலி தான் மனசை நல்லா இழுக்குது. என இருவர் சுவார்சியமாகக் கதைத்துக் கொண்டு இருந்தனர். ஆரம்பம் எனக்கு அவர்களின் குடும்பப் பிரச்சினை ஒன்றைக் கதைப்பது போல் இருந்தாலும் அடுத்த விடயத்துள் தம்மை அறியாமலே சென்றே போது, உணர்ந்து கொண்டேன். தொலைக்காட்சித் தொடர் அவர்களின் சிந்தனையை எவ்வளவு மழுங்கடித்துள்ளது.

உண்மையில் இந்த தொலைக்காட்சித் தொடர்கள் மக்களின் பகுத்தறிவுச் செயலாற்றுகையை எவ்வளவு மோசமான நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது என்பதை பல்வேறான உதாரணங்கள் மூலமாக கண்டுகொள்ள முடியும். இவை பற்றி நியாயப்படுத்த முனைபவர்கள். மிக முக்கியமான பொழுதுபோக்கு சாதனமூடாக மக்கள் பொழுதை மகிழ்வாக கழிக்கின்றனர் எனச் சொல்லுவதும் உண்டு.

ஆனால்.., உண்மைகளைப் புரட்டிப்பார்ப்போம் என்று சற்றுச் சிந்திப்போமாக இருந்தால் நாம் என்ன மாதிரியான மகிழ்ச்சி உடையவர்கள் என்பதைத் தெரிந்து வெட்கப்படுவோம். தொலைக்காட்சிகளில் வரும் நல்ல விடையங்களைப் பார்ப்பதற்கு நாம் நேரம் ஒதுக்குவதும் கிடையாது. இதனைக் குறிப்பிட்டுச் சொல்வதென்றால் மனதைப் போதை நிலைக்குக் கொண்டு சென்று கனவுலகில் மிதக்கவைக்கும். தொலைக்காட்சித் தொடர்களுக்கு முன் நாள்முழுவதும் தவமிருந்து நேரத்தை வீணடிப போரின் ஓய்வு நேரம் இந்தத் தொலைக் காட்சிகளில் செய்திகள் ஒலிபரப்பப்படும் நேரங்கள் மட்டும் தான். அங்கு அப்போதுதான் தொலைக்காட்சிப் பெட்டிக்கும் ஓய்வு.

ஒரு குடும்பப் பெண் கணவனிடம் நச்சரித்துக்கொண்டும், கண்ணீர் விட்டுக்கொண்டும் இருந்துள்ளார். தொலைக்காட்சிப் பெட்டி வேண்டுமென்று, தொலைக்காட்சிப் பெட்டியை வேண்டிக் கொடுத்த நாள் முதல் ஒரே தீராத அழுகை என்னவென்று கேட்டால், அதில் வரும் தொடர்கள் தான் என்பதை வெறும் நகைச்சுவைக்காக எழுதுவதாக எண்ணிவிடாதீர்கள். தமிழ் நாட்டில் பிரபல்யமான தொழிலாக தொலைக்காட்சித் தொடர்கள் 'தயாரிக்கப்படுகின்றன.



நாங்கள் எங்களுடைய நேரத்தையும், பணத்தையும் செலவுசெய்து எமது இளம் சமூகத்தின் எதிர்கால வாழ்வையும் அழிவுக்குள்ளாக்கக் கூடியதாகவே தொலைக்காட்சித் தொடர்களை பார்ப்பவர்கள் இருக்கின்றோம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள உறவினர் ஒருவரின் வீட்டிற்கு காலை 9.00 மணியளவில் சென்றேன். பரபரப்பாக அந்த வேளையே மதிய உணவை சமைக்கும் வேலைகளில் ஈடுபட்டனர். நான் நினைத்தேன் நீண்ட தூரத்துக்கப்பாலிருந்து வந்த என்னை உபசரிக்கவே இந்த பரபரப்பு. மெதுவாக சமையலைச் செய்யுங்கள். நான் இங்குதானே இன்று நிற்கப் போகின்றேன் எனக் கூறியபோது, அவர்கள் சொன்ன பதில் என்னை நிலைகுலையச் செய்தது.

குறிப்பிட்ட நாடகம் ஒன்றைச் சொல்லி அது தொடங்கப் போகின்றதென அவசரமாக சமைக்கின்றோம் என்றனர். முன்னொரு காலத்தில் எமது மக்களின் சுய பொருளாதார கட்டமைப்பிற்கான கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, வீட்டுத் தோட்டம் எல்லாவற்றிற்குமாக ஒதுக்கும் நேரம் இந்த தொலைக்காட்சி தொடர்களுடன் கழிவது ஆபத்தானது.

தயாரிப்பாளார்களும், ஒளிபரப்புகின்றவர்களும் சுளையாக பணத்தைச் சம்பாதித்துக் கொள்ள நாம் மலத்துள் நகையைப் புதைப்பவர்களாக உள்ளோம். இது மிகவும் மோசமான விளைவை தரவல்லதே.

குப்பி விளக்கிற்கும், மண்ணெண்ணை இல்லாத காலங்களிலும் பொழுதுபட்டவுடன் பிள்ளைகள் படிப்பிப்பதில் ஈடுபாடுகாட்டியதால் தான் எம்மிடம் அழிக்க முடியாத கல்வி வளர்ச்சி இருந்தது. இன்று பொழுதுபட்டவுடன் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் அமர்ந்திருப்பதனால் எம்மத்தியில் சீர்கேடான பண்பாட்டுத்தைரியங்கள் செத்துப் போன கீழ்த்தரமான கல்வியை தொலைத்தவர்களாக மாறிவிடுவோம். இது தொடர்பாக எம்மிடையே ஆரோக்கியமான முடிவு அவசியம்.

தொலைக்காட்சி நாடகங்களில் வரும் கதாபாத்திரங்களைப் பாருங்கள் காஞ்சிபுரம் பட்டு சேலையும், பதக்கத்துடனும் காட்சி தருவார்கள். சமையலறையில் வெங்காயம், மிளகாய் வெட்டிக் கொண்டிருப்பவர்கள். இப்படி எம்மவர்கள் யதார்த்தமாக வாழமுடியாது. போலியான மனப்பால் பருகும் வயதான வெளிப்பாடுகளை தரவல்ல தொடர்களால் எமது சமூகம், அறிவியல் ரீதியாக இன்னும் பின்னோக்கிச் செல்வதா? முன்னோக்கிச் செல்லாமல் போனதா? தவிர்க்க முடியாததாகும்.

ஆகவே, நீண்ட போரினால் எமது இனத்தின் அழிவைக் காப்பாற்ற பலமான போரியல் கட்டுமானத்தை தோற்றுவித்துள்ள எமது இனம் மீண்டும் மிளிர வேண்டுமே தவிர, புதைபட்டுவிடக்கூடாது. எம்மிடையே ஒரு பழமொழி உள்ளது. உள்ளூரில் நல்ல மாப்பிள்ளை பிடிககாதவர், அயலூர் உதவாத மாப்பிள்ளையைப் பிடிப்பார் என்று அதேபோல், எம்மிடையே ஏராளமான கலைகள் இருக்க - நாம் அயலவரின் மோசமான சிந்தனை, சொந்தப் போலிகளை அரவணைக்கின்றோம். இதனால், நாம் சந்திக்கப்போகும் பின்னடைவுகளைப்பற்றி உணரவேண்டும்.

தொலைக்காட்சிகளில் வரும் நல்லவற்றை உள்வாங்கலாம். மாணவர்களின் கலைக்கு ஆப்பு வைக்கக்கூடியவை, மன உழைச்சலை ஏற்படுத்தக்கூடியவை, பண்பாட்டைச் சீரழிக்கக்கூடியவை, இவை அவர்களின் சிந்தனைகளை திசை திருப்பக்கூடியவை என பிரச்சினைகளைத் தரக்கூடியவற்றை நிச்சயமாகத் தவிர்க்கவேண்டும். இதற்கான விழிப்புணர்வை ஊடகங்களும் மேற்கொள்ள வேண்டும். அண்மையில் தமிழ்நாட்டில் நின்றபோது திருமாவளவன் சொன்னார் - சாதியை, மதத்தை, சினிமாவை, தொலைக்காட்சித் தொடரை ஒழித்தால்தான் தமிழ்நாடு ஒளிரும் என்று. நாம் என்ன செய்யப் போகின்றோம்? இவற்றைச் சொல்லும்போது நினைவில் வருவது.....

அடக்கம்
செய்யப்படுகின்றோம்
இரண்டு
பெட்டிகளில்
சவப் பெட்டியிலும்
தொலைக்காட்சிப்பெட்டியிலும்
"நன்றி"
'அடக்கம்'

காசி ஆனந்தன்.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்;
# 15 பொதுமக்கள் பலி, 110 பேர் காயம்!



(பாக்தாத்)

ஈராக்கின் இருவேறு இடங்களில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் குறைந்தது 15 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 110 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மொசூல் பகுதியில் நகர மேயரின் அலுவலகத்துக்கு முன் நடத்தப்பட்ட காருடன் கூடிய தற்கொலைத் தாக்குதலில் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

அத்துடன் இந்தத் தாக்குதலில் 100 பேர்வரை கடும் காயங்களுக்கு உள்ளானதுடன் ஒன்பது கார்களும் எரிந்து நாசமாயின. சுற்றியிருந்த கட்டடங்களும் கடும் சேதத்துக்கு உள்ளாகின.

பகுபா நகருக்கு வெளியே நடத்தப்பட்ட மற்றொரு கார் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டதுடன் பதினொரு பேர் படுகாயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலின் பின்னர் பல குண்டுவெடிப்புக்கள் இடம்பெற்றதாகவும், கூட்டணிப் படைகளின் தலைமை அலுவலகம் மீது மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மொசூல் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் - உள்ளூர் நகர மேயரான மேஜர் ஜெனரல் சமி - அல்- கஜீசாவை இலக்குவைத்து நடத்தப்பட்டதாகவும், இவர் உள்ளூர் மாகாணசபையின் பாதுகாப்புக் குழுவின் தலைவராக இருப்பதும் இவர் மீதான தாக்குதலுக்கு காரணமாக இருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும், இவர் எவ்வித காயங்களுமின்றி உயிர்தப்பியுள்ளதாகவும் இவரது மெய்க்காவலர்கள் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

மற்றைய தாக்குதல் பாக்தாத்தின் வடகிழக்குப் பகுதியிலுள்ள பகுபா நகரத்தில் நடைபெற்றது. பொதுமக்கள் வேலைக்குச் செல்ல தயாராக நின்ற வேளையிலேயே இந்தத் தாக்குதல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் அமெரிக்கப் படையினர் சிலர் உயிரிழந்ததுடன் நான்கு ஈராக்கியர்களும் காயமடைந்தனர்.

காலை வேளை சனநெருக்கடிமிக்க நேரத்தில் தற்கொலையாளர் 10ருடன் சேர்த்து தன்னையும் வெடிக்கவைத்ததாக ஈராக் பொலிஸ் அதிகாரியான அலி - ஹுசைன் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் பகுபா நகரிலுள்ள ஈராக் விமானப்படையினர் முன்னர் பயன்படுத்திய முகாமிற்கு பத்து மீற்றர் தூரத்தில் நடத்தப்பட்டதாகவும், அந்த முகாம் தற்போது அமெரிக்கப் படையினரால் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# ஸ்பெயின் ரயில் குண்டுத் தாக்குதல்;
# சந்தேகநபர் இத்தாலியில் கைது!



(மட்றிட்)

ஸ்பெயினின் மட்றிட் பகுதியில் இடம்பெற்ற ரயில் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவரென சந்தேகிக்கப்படும் ஒருவர் இத்தாலியில் வைத்து கைதுசெய்யப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டுவருவதாக இத்தாலிய பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் எகிப்தைச் சேர்ந்த மொஹமட் எனவும், கடந்த மூன்று மாதங்களாக இவர் மீது விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், இது தொடர்பான உடனடியான தகவல் எதையும் பொலிஸார் வெளியிடவில்லை எனவும் கொறியாரே டெல்லா சீரா என்ற அதிகாரி தெரிவித்தார்.

உறுதிப்படுத்தப்படாத செய்திகளின்படி பிரான்ஸ், ஸ்பெயின் மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளிலும் ஸ்பெயினில இடம்பெற்ற ரயில குண்டுத் தாக்குதல் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தத் தாக்குதலுக்குத் திட்டமிட்டவர்கள் உயிரிழந்தோ அல்லது சிறைகளில் அடைக்கப்பட்டோ உள்ளதாக ஸ்பெயின் அரசாங்கம் முன்னர் தெரிவித்திருந்தது.'


மொறோக்கோ நாட்டைச் சேர்ந்த இஸ்லாமியக் குழுவொன்றே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாமென ஸ்பெயின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் வீடொன்றில் தங்கியிருநததாகவும், இவர்களைக் கைது செய்யும் நோக்கில் பொலிஸார் சென்றபோது முக்கியமானவர்கள் தம்மைத் தாமே அழித்துக் கொணடதாகவும், இந்த வீட்டில் இருந்த மற்றையோர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




# நச்சுக் கலந்த குடிநீரை அருந்தியதால் 30 மக்கள் பலி; 3 ஆயிரம் பேர் பாதிப்பு!

## பாகிஸ்தான் - ஹைதராபாத்தில் சம்பவம்



பாகிஸ்தானின் தென்பகுதி நகரான ஹைதராபாத்தில் நச்சுத் தன்மையடைந்த தண்ணீரை அருந்தியதால் 30 பொதுமக்கள் உயிரிழந்தனர். மூவாயிரம் பேர்வரையில் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹைதராபாத் மாவட்ட அதிகாரி மொஹமட் ஜினேஜோ தெரிவிக்கையில் -

மாசடைந்த தண்ணீர் குளத்திலிருந்து ஆற்றுக்குத் திறந்துவிடப்படுவதாகவும் அதனையே மக்கள் குடிநீருக்குப் பாவிப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நட்டஈடு வழங்கப்படுமென அதிகாரிகள் தெரிவித்தனர்.

தண்ணீர் மாசடைந்தது எவ்வாறென்பது இதுவரை தெரியமாலிருப்பதாகவும், குளத்திலிருந்து நீரை ஆற்றுக்குத் திறந்துவிட்டவேளை அதனை அருந்திய மக்கள் உயிரிழக்கத் தொடங்கியதாகவும் பி.பி.சி. செய்தியாளர் தெரிவித்தார்.

இந்த உயிரிழப்புச் சம்பவம் கடந்த மாதம் 15 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்துவிட்டதாகவும் வயிற்றோட்டம், தோல் வியாதி மற்றும் பல நோய்களினால் பாதிக்கப்பட்ட பெருமளவு மக்கள் அரசாங்க மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதும் பெருமளவு மக்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். நேற்றுமுன்தினம் மட்டும் பாதிக்கப்பட்ட 17 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைத் தடுக்கத் தவறிய அதிகாரிகளுக்கு எதிராக- கவனயீனமாக இருந்தார்கள் எனத் தெரிவித்து பாகிஸ்தான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும், இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

இநதச் சம்பவம் நடந்தும் குறித்த பகுதிக்கு இதுவரை நல்ல குடிநீர் உடனடியாக வழங்கப்படவில்லை. மக்களுக்கான குடிநீர் உடனடியாக வழங்கப்படாவிட்டால், தாம் பதவி விலகப்போவதாக 17 மாநகரசபை தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.

# ஈராக்கின் தீர்வுக்கு பிரான்ஸ் ஆதரவு!

ஈராக்கின் இடைக்கால அரசின் திட்டவரைபு குறித்த தீர்வுக்கு பிரான்ஸ் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் ஈராக்கிய அரசாங்கத்துக்கும் வெளிநாட்டுப் படைகளுக்கும் இடையில் இதுவரை நிலவிவந்த சிக்கல்கள் தீர வாய்ப்புள்ளதாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சிவராசா சுதாகர் ஆகிய எனது மூன்று முச்சக்கர வண்டிகள், ஒரு மோட்டார் சைக்கிள் ஆகியவற்றுக்கான முக்கிய ஆவணங்கள் மற்றும் எனது தேசிய அடையாள அட்டை என்பன 08.06.2004 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் கொடிகாமத்துக்கும் இடையில் தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். T.P:0777-168474 (சி-2650)

SPOKEN ENGLISH WITH GRAMMAR

MR.MA.HARI

புதிய பிரிவு ஆரம்பம்:
09.06.2004 புதன்
மாலை 5 மணி

Monday, Wednesday
5 pm - 6 pm

HARY'S INSTITUTE

இல.564, கஸ்தூரியார் வீதி,
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (சி-2649)

ராஜா யாழ்ப்பாணம்.

3 ஆவது வாரமாக
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா
நடித்த




காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30 மட்டும் (பு.நே) (சி-2623)

திறைஞ்சனால்ஸ் சங்கானை

கார்த்திக், ரோஜா, மணிவண்ணன்
நடித்த
சின்னராஜா
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு8.45 (பு.நே)
AMERICAN PIE (சி-2621)

நாகம்ஸ் சுன்னாகம்

மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ்
நடித்த




(சி-2622)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00, 10.00

## பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

எமது ஸ்தாபனத்தின் 45 ம் வருட பூர்த்தியை முன்னிட்டு 20% - 50% வரையிலான கழிவுகள் பாடப் புத்தங்களுக்கும், புத்தங்களுக்கும் வழங்கப்படும்.

**உங்கள் பிள்ளைகளுடன் இன்றே விஜயம் செய்யுங்கள்**

மாணவர்களுக்கான பாடசாலை, பல்கலைக்கழக பாடப் புத்தகங்கள், புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்கள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், தர உள்ளீட்டுப் பொருட்கள், மூலதனப் பொருட்கள், அழிபொருட்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், அலுவலக அலுமாரிகள், மேசைகள், பயில் அலுமாரிகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P புறஜெக்ரர், றோணியோ மெசின், மனித உடற்கூறுகளின் கனவுருத் தொகுதிகள், தொலைநோக்கி கருவிகள் (வானியல்), நுணுக்குக் காட்டிகள், கணினி நூல்கள் மற்றும் அறிவமுது, அந்திவானம் பதிப்பங்களின் பதிப்புகள், வெளியீடுகள் யாவும் நீங்களே தெரிவுசெய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (சி-2531)


உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

முருகைக் கற்பாறைத் தொடர்கள் உலகில் 109 நாடுகளைச் சூழ தடுப்பு அரண்களாக விளங்குகின்றன. இவை கடல் அலைகள், புயற் கொந்தளிப்புக்களைத் தாங்கி கரையோரம் வாழ் மக்களுக்குப் பாதுகாப்பளிக்கின்றன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# எதிர்க்கட்சிகளிடம் ஆட்சியை ஒப்படைக்குமாறு கோர முடிவு!

(கொழும்பு)

நாடாளுமன்றின் பெரும்பான்மை எதிர்க்கட்சிகளிடம் இருப்பதால் ஆட்சியை எதிர்க்கட்சியிடம் ஒப்படைக்க வேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரவுள்ளன.

இதற்கான தீர்மானம் இன்று மேற்கொள்ளப்பட்டு அந்தத் தீர்மானம் ஜனாதிபதிக்கும் நாடாளுமன்ற சபாநாயகருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக எதிர்க்கட்சி தரப்புகள் தெரிவித்தன.

கடந்த நான்கு நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அரசு தனது பெரும்பான்மையை நிரூபிப்பதிலிருந்து தவறிவிட்டது. அதேவேளை, நாடாளுமன்றத்திலும் அதன் செயற்பாடுகள் எதிர்க்கட்சி ஒன்றின் செயற்பாடுகள் போன்று பொறுப்பற்ற விதத்தில் அமைந்துள்ளன.

எனவே, நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை பலமுள்ள எதிர்க்கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் எனக் கோரும் தீர்மானத்தில் எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இன்று நடைபெறும் சந்திப்பொன்றில் கையொப்பமிடவுள்ளனர்.

இதற்காக இன்றுவரை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கொழும்பிலேயே தங்கியிருக்குமாறு குறிப்பிட்ட கட்சிகளினால் கேட்கப்பட்டுள்ளனர்.

# நிமலராஜன் கொலை வழக்கு; ஜூலை 22 இற்கு ஒத்திவைப்பு!

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை வழக்கு அடுத்த மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்களில் மூவர் மாத்திரமே மன்றில் ஆஜராகியிருந்தனர்.

ஏனைய இருவர் மன்றில் ஆஜராக முடியாமைக்காக மருத்துவச் சான்றிதழைச் சமர்ப்பித்திருந்தனர்.

இந்நிலையில் வழக்கு அடுத்த மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பான முன்னேற்ற அறிக்கை நேற்று மன்றில் சமர்ப்பிக்கப்படும் என பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டபோதும், அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த முன்னேற்ற அறிக்கையினை அடுத்த மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு யாழ்.மாவட்ட நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# நாடாளுமன்றக் குழப்பினால் தேர்தலைச் சந்திக்க நேரிடும்!

எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் நாடாளுமன்ற தொடர் கூட்டங்களை சீர்குலைக்க முனைந்தால் மற்றுமொரு தேர்தலை சந்திக்க வேண்டியிருக்கும் என்று, அரசாங்கக் கட்சியின் பிரதம அமைப்பாளர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து, அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தச் சம்பவங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியே முழுப்பொறுப்பும் ஏற்க வேண்டும். செங்கோல் இல்லாமல் நேற்றுக் காலை நடத்தப்பட்ட அமர்வு, நிலையியற் கட்டளைக்கு முரணானது.

இன்று நடந்த நாடாளுமன்ற நடவடிக்கைகள் சட்ட விரோதமானவை. இதற்கான பொறுப்பை சபாநாயகர் ஏற்க வேண்டும்.

அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பௌத்த குரு ஒருவரைத் தாக்கினர் என்ற குற்றச்சாட்டு ஏற்கக்கூடியதல்ல. எதிர்க்கட்சியினர் இதற்கான மருத்துவ ரீதியான சாட்சியத்தை வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றி வாகனங்களைச் செலுத்துவதற்கு 15 ஆம் திகதிக்குப் பின்னர் தடை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இம்மாத நடுப்பகுதியிலிருந்து சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்துதல், தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிள் செலுத்துதல், அல்லது பிரயாணம் செய்தல், வழி அனுமதிப்பத்திரம் பெறாத வாகனங்கள் சேவையிலீடுபடல் என்பன முற்றாகத் தடைசெய்யப்படும்.

அத்துடன் மீறிச்செயற்படுவோருக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுப்பார்களென யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக இம்மாத ஆரம்பத்தில் யாழ். மாவட்ட செயலகத்தில் சம்பந்தப்பட்ட சகலரும் கலந்து கொண்ட கூட்டத்தில் போக்குவரத்துச் சம்பந்தமான சட்டங்களை மீறுவோர் மீது நடவடிகைக எடுக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய சட்டவிதிகளுக்கு முரணாக வாகனங்களைச் செலுத்துதல் மற்றும் சட்டமுரணான செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்றவற்றால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ள இந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

மேலும் வாகனங்கள் வருடாந்த வரி அனுமதிப்பத்திரம், வலுவிலுள்ள காப்புறுதிச் சான்றிதழ் ஆகியவற்றைப் பெற்றிருப்பதுடன், செலுத்தும் வாகன வகுப்புக்கேற்ப சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

இதற்கமைய எ-மோட்டார் கோச், பி- மோட்டார் லொறி, எ-1- பாரம் குறைந்த மோட்டார் கோச், பி -1 - பாரம் குறைந்த மோட்டார் லொறி, சி - கார், சி-1 - இரட்டை நோக்கு வாகனம், டி- மோட்டார்சைக்கிள், இ - மோட்டார் முச்சக்கர வண்டி, எவ் - மோட்டார் முச்சக்கர வான், ஜி - உழவு இயந்திரம், ஜி -1 பாரம் குறைந்த உழவு இயந்திரம், எச்- சக்தியற்றோருக்கானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போதைய புதிய நடைமுறையின் கீழ் பதிவு செய்யப்பட்டு ஆங்கில எழுத்துடன் ஆரம்பிக்கும் வாகன இலக்கங்களைக் கொண்ட வாகனங்களில் வாகன அடையாள அட்டை, ஸ்ரிக்கர் என்பன மேலதிகமாக இருத்தல் வேண்டும்.

பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் வாகனங்கள் வலுவிலுள்ள பயணிகள் சேவை வழி அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டியதுடன் தகைமைச் சான்றிதழ் இணைப்பிரதியையும், ஓட்டக் குறிப்புத்தாள் ஆகியவற்றையும் வைத்து இருப்பதுடன் பயணிகள் சேவை வழி அனுமதிப்பத்திரத்துடன் வழங்கப்படும் லேபலை முன் கண்ணாடியில் ஒட்டியிருத்தல் வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டிப்பளையில் மீண்டும் தமிழீழ நீதிமன்றம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் அண்மையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட தமிழீழ மாவட்ட நீதிமன்ற செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னர் தமிழீழ மாவட்ட நீதிமன்று இயங்கிய பட்டிப்பளை பகுதியில் மீளவும் நீதிமன்று நாளை காலை 10 மணிக்குத் திறக்கப்படவுள்ளதாக தமிழீழ நீதி, நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள பொதுமக்களின் பிணக்குகளைத் தீர்த்து அங்கு சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதே இந்தத் நீதிமன்றத் தீர்ப்பின் நோக்கமாகும்.

முன்னர் நீதிமன்றில் நிலுவைகளாக இருந்த வழக்குகளுக்குரியவர்களை நீதிமன்றில் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## நாடாளுமன்றத்தில் அமளி துமளி...

ஏற்படும் நிலையும் உருவானது.

இந்தக் குழப்பத்திற்கு மத்தியில் செங்கோலை யாரோ எடுத்துச் சென்றுவிட்டனர். செங்கோலை உரிய இடத்தில் வைக்குமாறு சபாநாயகர் பலமுறை வேண்டுகோள் விடுத்தபோதும், எவரும் அதனை கொண்டுவந்து வைக்கவில்லை. செங்கோல் இல்லாமலேயே அக்மீமன தேரர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதேவேளை - ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்களான நிர்மல கொத்தலாவல மற்றும் எச்.ஆர். மித்திரபால இருவரையும் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளுமாறு சபாநாயகர் அழைப்பு விடுத்தார். சத்தியப்பிரமாணம் செய்ய அவர்கள் வரவில்லை.

அமளி துமளியை அடுத்து நாடாளுமன்றத்தை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

இதுகுறித்து ஆராய்வதற்காக கட்சித் தலைவர்களின் கூட்டம் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார தலைமையில் நடைபெற்றது.

நேற்றுக் காலை 10.45 மணியளவில் காணாமற்போன செங்கோல் பிற்பகல் 2.20 மணியளவில் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமர்ந்திருந்த பகுதியூடாக சபைக்கு கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து சபை கூடியது. இந்த வேளையில் சபையின் முதல்வர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஜூலை மாதம் 20 ஆம் திகதி வரை, சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

இதற்கமைய சபை நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூலை மாதம் [illegible] ஆம் திகதி காலை 10 மணிவரை ஒத்திவைக்கப்பட்டதாக சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார அறிவித்தார்.

## அடுத்த கட்ட....

புதிய நாடாளுமன்ற உறுப்பினரின் நியமனம் கடந்த 19 ஆம் திகதியே தேர்தல் ஆணையாளரால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட பின்னர், குறிப்பிட்ட நாடாளுமன்றப் பதவி உத்தியோகபூர்வமானதாகும்.

இதனையடுத்து, மேற்கொள்ளப்படும் நாடாளுமன்றத்திலான சத்தியப்பிரமாணமானது, சம்பிரதாய நிகழ்வு மாத்திரமே என ஐக்கிய தேசியக் கட்சியினர் நேற்றுக் குறிப்பிட்டனர்.

நாடாளுமன்றத்தை நீதிமன்றம் ஒன்றினால் கட்டுப்படுத்த முடியாதென்று முன்னாள் சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்கவின் கருத்துரையையும் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

## 122 ஆண்டுகளின் பின்னர் சூரியனை வெள்ளிக் கிரகம் நேற்றுக் கடந்து சென்றது!



122 ஆண்டுகளுக்குப் பின்னர் சூரியனை வெள்ளிக் கிரகம் கடந்து சென்ற அதிசய நிகழ்வு நடந்தது.

விண்வெளியில் சூரியனை மையமாகக் கொண்டு புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய 9 கிரகங்கள் சுற்றி வருகின்றன.

இதில் புதன், வெள்ளி, ஆகிய 2 கிரகங்களும் பூமிக்கும், சூரியனுக்கும் இடையே கடந்து செல்லும் போது சூரியனில் சிறு கரும்புள்ளி மெல்ல மெல்ல நகர்ந்து செல்வது போல் தோன்றும்.

வெள்ளிக் கிரகம் சூரியனுக்கு குறுக்கே இடைமறித்து நேர்க்கோட்டில் மெல்ல மெல்ல நகர்ந்து செல்லும் காட்சிக்கு வெள்ளி நகர்வு என்று பெயர். காணக்கிடைக்காத இந்த வான் அதிசயம் அடிக்கடி நடக்கக் கூடியதல்ல.

இதற்கு முன்பு 1882 ஆம் ஆண்டு வானில் வெள்ளிக்கிரகம் சூரியனை இடைமறித்து நகர்ந்தது. 122 ஆணடுகளுக்குப் பிறகு இந்த அற்புத நிகழ்ச்சி நேற்று நடந்தது.

வெள்ளிக்கிரகம் கடந்து செல்லும் காட்சியை இலட்சக்கணக்கான மக்கள் பார்த்துப் பரவசம் அடைந்தனர். இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் இந்த அரிய நிகழ்வு தெளிவாகத் தெரிந்தது. இனி அடுத்து 2012, 2117, 2125 ஆம் ஆண்டுகளில் தான் வெள்ளி நகர்வு நிகழ்வைக்காண முடியும்.

சூரியனை வெள்ளிக்கிரகம் கடந்து சென்ற அற்புதத்தை இந்தியத் தொலைக்காட்சிகள் நேரடி ஒளிபரப்புச் செய்தன. வெள்ளிக் கிரகம் கடுகு போல சிறு கரும்புள்ளியாக நகர்ந்ததை தொலைக்காட்சியில் இலட்சக்கணக்கானோர் கண்டுகளித்தனர்.

விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நிபுணர்கள், வெள்ளிக்கிரகம் கடந்து செல்லும் அழகை வர்ணித்து விளக்கம் அளித்தனர். அந்த சமயத்தில் வெள்ளிக்கிரகம் பற்றிய பல்வேறு புதுத்தகவல்களை வல்லுநர்கள் தெரிவித்தனர்.

ஐரோப்பியா, ஆபிரிக்கா நாடுகளிலும் வெள்ளி நகர்வு தெரிந்தது.

## சகல கட்சிகளும் இணைந்து அரசுக்கு எதிராக...

தாக்குதலுக்கு இலக்காகியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பௌத்த பிக்குகள் இருவர் தாக்கப்பட்டமைக்கு பலர் காரணமாக இருந்தார்கள். அவர்களில் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயும், ஜீவன் குமாரதுங்காவும் முக்கிய இடம்வகித்தனர்.

தேர்தல் காலம் முதல் இன்றுவரை ஹெல உறுமயக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தேரர்களுக்கு களங்கமும், அபகீர்த்தியும் ஏற்படுத்தும் வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வந்துள்ளது. இது கவலைக்குரிய விடயமென்று உடுவே தம்மாலோக்க தேரர் மேலும் கூறினார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் எல்லாவெல மேதானந்த தேரர் கருத்துத் வெளியிடுகையில்-

நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் புரையோடிப்போயுள்ள நிலையில் அவற்றைத் தீர்க்காமல் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மீது களங்கம் ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுவது பெரும் கவலையைத் தருகிறது. தொழில், சுகாதாரம், சம்பளப் பிணக்குகள், வடக்கு - கிழக்கு பயங்கரவாதம், வாழ்க்கைச்செலவு ஆகிய பிரச்சினைகளை தீர்ப்பதனை விடுத்து எமது கட்சியை அரசாங்கம் இல்லாதொழிக்க முற்படுகிறது.

இன்று நாடாளுமன்றத்திற்குள் பயங்கரவாதம் புகுந்து விட்டது, அதன்மூலம் பயங்கரவாத நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குற்றஞ்சாட்டினார்.

## விற்பனை மேம்பாட்டாளர்கள் தேவை

நமது ஈழநாடு பத்திரிகையின், விற்பனை மேம்பாட்டு பகுதிக்கு ஆர்வமும், சுறுசுறுப்பும் உடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நீங்கள் ஆர்வமுடையவராயின் தங்களை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களுடன் எதிர்வரும் 2004.06.10 ஆம் திகதிக்கு முன்னர் காரியாலயத்திற்கு வருகைதரவும்.

நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.